சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2009
கார்த்திகை 3
ஞாயிற்றுக் கிழமை 17
ஞாயிறு (19-11-1978)
நிறுவியது 1947
புத்தகம் 32
இதழ் 49
விலை சதம் 60

# பட்ஜெட் - படு ஏமாற்றம்!

## விலைவாசி குறைய வழியேதுமில்லை!

## ஏழைகளுக்கு நிவாரணமுமில்லை!

சிறீலங்காவின் நிதியமைச்சர் 15-11-78ல் சமர்ப்பித்துள்ள இரண்டாவது வரவுசெலவுத் திட்டம் மக்களுக்கு பெருத்த ஏமாற்றமாக அமைந்துள்ளது.

மக்களால் தாக்குப்பிடிக்க முடியாத அளவுக்கு உயர்ந்துள்ள விலைவாசியைக் கட்டுப்படுத்தவோ வாழ்க்கைச் செலவைக் குறைத்து மக்களின் பளுவை நீக்கவோ எதுவித திட்டமும் வரவுசெலவுத்திட்டத்தில் முன்வைக்கப்படவில்லை. ஏழை, நடுத்தர மக்களுக்கு எந்தவித நிவாரணத்தையும் வரவுசெலவுத்திட்டம் வழங்கவில்லை.

ஆக, கண்துடைப்பாக, பத்துசதவீத சம்பளஉயர்வு அதுவும் ரூபா 50 க்கு மேற்படாமல் அரசாங்க தனியார்துறை ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆயினும் சாதாரண ஏழைத் தொழிலாளர் வர்க்கத்தினதும்பாட்டாளி வர்க்கத்தினதும் வாழ்க்கைச் செலவுச் சுமையைக் குறைப்பதற்கு வரவு செலவுத் திட்டம் தவறிவிட்டது.

இவ்வாறாக எதிர்க்கட்சி வட்டாரங்கள் கருத்துத் தெரிவிக்கின்றன.

# "வரவேற்பு, தமாஷாக்கள் மாலைமரியாதை வேண்டாம்" தலைவர் அமிர் வேண்டுகோள்

## 18ம் திகதி சனிக்கிழமை காலை ரயிலில் கொழும்பிலிருந்து தாயகத்துக்குப் புறப்படுகிறார்



"நான் வெளிநாடுகளுக்கு சென்று, என் இனத்துக்கும் இயக்கத்துக்கும் என் தாய்நாடான தமிழ் ஈழத்துக்கும் நான் செய்ய வேண்டிய பெரும்பணியில் ஒரு சிறு துளியை நிறைவேற்றிவிட்டுத் திரும்பியுள்ளேன். எனது கடமையைத் தான் நான் செய்துவிட்டுத் திரும்பியிருக்கிறேன். தமிழினத்துக்கு முன் என்றுமேயில்லாத சோதனைகளும் நெருக்கடிகளும் நிறைந்துள்ள இன்றைய சூழ்நிலையில் அமைதியாக இயக்கப் பணியிலேயே என் முழுச் சிந்தனையையும் நேரத்தையும் செலவிட விரும்புகிறேன். இந்நிலையில் என் தாயகமான தமிழ் ஈழத்துக்கு நான் வரும்போது என்னை எவ்விதமான ஆடம்பர வரவேற்புக்களிலோ, தமாஷாக்களிலோ, மாலை மரியாதைகளிலோ சிக்க வைக்க வேண்டாமென்று இயக்க நண்பர்களையும், தமிழ்ப் பொதுமக்களையும் இளைஞர்களையும் பணிவோடும், உரிமையோடும் கேட்டுக்கொள்ளுகிறேன். மாலை மரியாதைபெறவும் வரவேற்பு ஊர்வலம் நடத்திக் கொண்டிருக்கவும் இப்போது நேரமும் இல்லை, அதற்குஅவசியமும் இல்லை!"

—இவ்வாறு தமது வெளிநாட்டுச் சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு தற்போது சிறீலங்காவின் தலைநகரான கொழும்பில் தங்கியிருக்கும் தமிழ் ஈழ முதல் வரும் சிறீலங்காவின் எதிர்க்கட்சித் தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் சுதந்திரன் மூலம் தமிழ் ஈழ மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழ்ஈழத் தலைநகரங்களில் ஒன்றான யாழ்ப்பாணத்துக்கு எப்போது வருகிறீர்கள்? உங்களை வரவேற்பதற்கு இங்கு தமிழ் மக்களும், இளைஞர்களும், இயக்கததோழர்களும் மெத்த ஆவலோடு காத்திருக்கிறார்கள் என்று திரு. அமிர்தலிங்கத்திடம் தெரிவித்தபோது, தான் வரும் சரியான திகதியை வெளியிடத்தாம் விரும்பவில்லை என்றும், வீணான ஆடம்பர வரவேற்புக்களையும் மாலைமரியாதைகளையும் தான் விரும்பாததே அதற்குக் காரணமென்றும், அமைதியாக வந்திறங்கவே தாம் விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார். இதை சுதந்திரன் மூலம் எமது மக்களுக்குத் தெரியப்படுத்துங்கள் என்றும் தலைவர்கேட்டுக்கொண்டார்.

## அரசாங்க நிலத்திலிருந்து தமிழரை வெளியேற்ற முயற்சி

சட்ட விரோதமாக அரசாங்க நிலங்களில் குடியேறினார்கள் என்று கூறி தமிழ் பிரதேசங்களில் நீண்டகாலமாக காடுகளை வெட்டி விவசாயத்திலீடுபட்டு வரும் தமிழர்களை அவ்விடங்களிலிருந்து வெளியேற்றவும் அவர்கள் மீது வழக்குத் தொடரவும் அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இதற்கான அதிகாரம் அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

தமிழ் பிரதேசங்களில் காணியற்ற தமிழ் விவசாயிகள் ஏற்கெனவே பல ஆண்டுகளுக்கு முன்பே அரசாங்கக் காணிகளில் குடியேறி அங்கு காடுகளை வெட்டி விவசாயத்திலீடுபட்டு வருகிறார்கள். இவர்களை சட்ட விரோதக் குடியேற்றக்காரர்கள் என்று கூறி அவர்களை அவர்களது ஜீவனோபாயமாக

—8-ம் பக்கம் பார்க்க

## அடுத்த இதழில் இருந்து...!

தமிழர் தலைவர் திரு. அமிர்தலிங்கத்தின் இருமாதகால வெளிநாட்டுப் பயணம் பற்றிய சுவையான செய்திகள், பேட்டிகள், படங்கள், அமிர் நிகழ்த்திய உரைகள், ஆகியன அடுத்த இதழ் சுதந்திரனிலிருந்து வாராவாரம் வெளியிடப்படும். உங்கள் பிரதிகளை உறுதிசெய்து கொள்ளுங்கள்.

## சந்திரகாசன் வெளிநாடு சென்றார்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சட்டத்துறைச் செயலாளரும், சுதந்திரன் நிர்வாக இயக்குனரும் தந்தை செல்வாவின் மைந்தனுமாகிய சட்டத்தரணி திரு. சா. செ. சந்திரகாசன் நியூசிலாந்தில் நடைபெறும் இனப் பிரச்சினை, சிறுபான்மையோர் பிரச்சினைகள் தொடர்பான சர்வதேச மாநாடொன்றில் கலந்து கொள்வதற்காக அங்கு சென்றிருக்கிறார்.

உலக கிறிஸ்த்தவப் பேரவையின் ஆதரவில் இம்மாதம் 14ம திகதி முதல் 20ம் திகதி வரை நியூசிலாந்தில் நடை பெறும இம்

—8-ம் பக்கம் பார்க்க

## வைகுந்தவாசன் தலைமையில் வெளிநாடுகளில் விடுதலை இயக்கங்கள் ஒன்றிணையும்?

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமையை ஏற்று வெளிநாடுகளில் இயங்கி வரும் தமிழ் ஈழ விடுதலை அணிகள் அனைத்தையும் ஒன்றிணைத்து லண்டனில் ஒரு மத்திய நிலையத்தை நிறுவுவது சம்பந்தமாக திரு. அமிர்தலிங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். இது சம்பந்தமாக லண்டனிலும் ஏனைய நாடுகளிலும் இயங்கி வரும் பல்வேறு விடுதலை அணிகளுடனும திரு. அமிர்தலிங்கம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். பெருமபாலும திரு. கிருஷ்ண வைகுந்தவாசன் இந்த அமைப்பின் அழைப்பாளராக (CONVENOR) இயங்கக் கூடும் என்று தெரிகிறது.

இந்த அமைப்பின் கிளைகள் அமெரிக்கா, புதுடெல்லி, சென்னை ஆகிய இடங்களிலும் அமையும் என்று தெரிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

# அலிப்பூர் சதி வழக்கும் அரவிந்தரின் விடுதலைப் பணியும்

**பரோடாவில் பேராசிரியராக வேலைபார்த்து வரும்போதே, அரவிந்தர் அடிக்கடி வங்காளம் சென்று வந்தார். அப்போது வங்கம் பிரிட்டிஷ் ஆட்சியின் அடக்குமுறைகளை எதிர்த்துக் குமுறிக்கொண்டிருந்தது. இளைஞர்களிடையே விடுதலை உணர்வும் புரட்சி மனப்பான்மையும் வளர்ந்து வந்தன. ஆங்காங்கே இரகசிய சங்கங்கள் தோன்றின. அரவிந்தர் அந்த இளைஞர்களுக்கு உற்சாகமும் ஆதரவும் தந்து வந்தார். மகாராஷ்டிரம் பஞ்சாப் ஆகியவைகளில் புரட்சிச் சங்கங்கள் தோன்றியதைத் தொடர்ந்து அவைகளுடனும் இரகசியத் தொடர்பு கொண்டார். விடுதலைப்போரை நடத்த காங்கிரசால் இயலாது என்று எண்ணினார்.**

இந்தியா ஒரு துணைக்கண்டம். அதைக்காக்க இருக்கின்ற பிரிட்டிஷ் படைகளோ மிகக்கொஞ்சம். அந்நிய ஆட்சியை எதிர்த்து விடுதலைப்போர் மூளுமானால் மக்களின் எழுச்சியை துணை கொண்ட கொரில்லாப் போர் நடத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறதென்றும் இராணுவத்தில் புரட்சிக் கருத்துக்களைப் பரப்பி இராணுவத்தை மக்கள் பக்கம் திருப்பலாம் என்றும் அரவிந்தர் கருதினார்.

அதே சமயத்தில் பிரிட்டிஷாரின் குண இயல்புகளையும் அரவிந்தர் கணித்துக் கூறினார். சுய விடுதலைக்கான எந்த முயற்சியையும் அவர்கள் எதிர்ப்பார்களாயினும் ஏகாதிபத்தியம் பலவீனமடையாத வகையில் சிறுசிறு சீர்திருத்தங்களுக்கு அவர்கள் இசைவார்கள். கடைசிவரை ஒரே பிடிவாதமாக இருக்க மாட்டார்கள். எதிர்ப்பும் கிளர்ச்சியும் நீடிக்குமானால், சமரசத்துக்கு வருவார்கள், நிலைமை முற்றிப்போகுமானால், மக்கள் தாமே அதிகாரத்தைக் கைப்பற்றும் வரையில் காத்திராமல் தாங்களாகவே சுதந்திரமளித்து விட்டுப் போய் விடுவார்கள்'' என்பது அன்றே அவருடைய கருத்தாக இருந்தது.

விடுமுறையில் ஒரு தடவை வங்கம் சென்றிருந்த அரவிந்தர் வங்கத்திலிருந்த தமது கடைசித்தம்பி வரீந்திரரை தம்முடன் பரோடாவுக்கு அழைத்துக்கொண்டு வந்தார். பலபேர்களுடன் தொடர்பு கொண்டார். மகாராட்டிரப் புரட்சிக்காரர்களுடன் தொடர்பு கொண்டார். புரட்சிசெயல்கள் மூலமாக நாட்டுக்கு பணியாற்ற இளைஞர்களுக்குப் பயிற்சியளிக்க வேண்டுமென்று அவர் கருதினார்.

1902ல் சுரேந்திரநாத் பானர்ஜி தலைமையில் ஆமதாபாத்தில் காங்கிரஸ் பேரவைக் கூட்டம் நடந்தபோது அரவிந்தர் அம்மாநாட்டுக்குச்சென்றிருந்தார். திலகரைச் சந்தித்துப் பேசினார். தொடர்ந்து தீவிரவாதிகளின் கூட்டங்களில் கலந்துகொண்டார்; 1905ம் ஆண்டில் வங்கப்பிரிவினை காரணமாக தேசிய இயக்கம் புதிய வீறு கொண்டது. புரட்சியாளர்களும் தீவிரமாக செயற்பட்டனர். வரீந்திரர் நடத்திய 'யுகாந்தர்' என்னும் இதழில் அரவிந்தர் தம் பெயரைப் போடாமல் கட்டுரைகள் எழுதிவந்தார்.

## வந்தே மாதரம்

இதற்கிடையில் விபின சந்திரபாலர் 1906ல் ரூபா 500 மூலதனம் கொண்டு 'வந்தே மாதரம்' என்ற நாளிதழ் தொடங்கினார். விபின சந்திரர் கேட்டுக் கொண்டதற்கிணங்க, அரவிந்தரே 'வந்தே மாதரம்' இதழின் பொறுப்பை ஏற்றார். வன்மையும், கம்பீரமும் தைரியமான சுதந்திரப் போக்கும் சீரிய லட்சியங்களும் கொண்ட 'வந்தே மாதரம்' இதழ் எழுத்துக்கள் மக்களைக் கவர்ந்தன. புத்துணர்ச்சி ஊட்டின. ஒவ்வொரு இல்லத்திலும் 'வந்தே மாதரம்' ஒலித்தது.

கல்லூரி வேலை, வந்தே மாதரம்' இதழ் வேலை ஆகியவற்றுடன் வங்கம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து அரசியல் பணியிலும் ஈடுபட்டு வந்தார் அரவிந்தர். அந்நிய ஆட்சியுடன் ஒத்துழையாமையைக் கடைப்பிடிக்க வேண்டும்; பிரிட்டிஷ் ஆட்சியை நீக்க இதுவே வழி'' என்று அவர் வலியுறுத்தினார்.

## அதிகார வர்க்கத்தின் சிற்றம்

'வந்தே மாதரம்' இதழில் கனல் பொறிபறக்கும் எழுத்துக்களை கண்ட பிரிட்டிஷ் அதிகார வர்க்கம் சிறியது: அதன் தொடர்பாக அரவிந்தரும், விபின சந்தரபாலரும் கைது செய்யப்பட்டனர். அரவிந்தர் குற்றச்சாட்டு வரம்புக்குள் அகப்பட்டுக்கொள்ளாதபடி மிகத் திறம்பட எழுதிவந்தார். ஆகவே அவருடைய எழுத்துரைகளிலிருந்து எதுவும் கூறமுடியவில்லை. எனவே வரீந்திரர் நடத்திய 'யுகாந்திரம்' என்னும் வங்காளி இதழிலிருந்து ஒரு கட்டுரையை மொழி பெயர்த்துப் போட்டுக் கொண்டதற்காக அரவிந்தரை அவ்வெளியீட்டுக்குப் பொறுப்பாளியாக்கி ராஜநிந்தனைக் குற்றம் சாட்டினர்; விசாரணை முடிவில் அரவிந்தர் விடுதலையானார். விபின சந்திரபாலர் 6மாத சிறைத்தண்டனை பெற்றார். இந்த வழக்கு காரணமாக அரவிந்தரின் புகழும் செல்வாக்கும் பெருகின. இதனையடுத்து அடுத்த மூன்று ஆண்டுகள் அரவிந்தர் வெளிப்படையாகவே எழுதினார்; மேடைகளிலும் முழங்கினார்; தேசிய இயக்கத்தின் தனிப்பெருந்தலைவ

ரென அரவிந்தர் போற்றப்பட்டார்.

## சுதந்திரத்துக்கு வழி

'வந்தே மாதரம்' இதழில் அரவிந்தர் எழுத்துக்களுக்கு ஓர் எடுத்துக்காட்டு இது—

'சுதந்திரம்தான் ஒரு சமுதாயத்தின் ஜீவன், உயிர். அச்சமுதாயம் மூச்சுவிட முடியாதபடி ஒடுக்கப்பட்டால், தற்காப்புக்காக அது மேற்கொள்ளும் எவ்வழியும் எம்முறையும் நியாயமானதேயாகும். ஆட்சி அமைதியான முறையில் சட்டரீதியில் நடைபெறுமானால் அடிமைப்பட்ட மக்கள் சாத்வீக எதிர்ப்பை மேற்கொள்ளலாம்.''

''சுயராஜ்யம் பெறுவதற்கு சாத்தியமான வழிகள் மூன்று. அதிகாரிகளுக்கு மனுப்போடுவது ஒரு வழி. எந்த நாடும் இதைப்பின்பற்றி சுதந்திரம் அடைந்தது கிடையாது! சுய முயற்சியால் நாமே முன்னேறுவது மற்றொரு வழி அமைக்கப்பட்டுள்ளஅரசாங்கத்தை மக்கள் ஒன்றுகூடி எதிர்ப்பது மூன்றாவது வழி. இது வரலாற்றில் காணப்படும் சம்பிரதாய முறை.

''நீதியும் நேர்மையும் அரசியல் தர்மத்துக்குரிய சூழ்நிலைகள். தாம் ஆளுல்போர் வீரனுக்குரிய நீதி தர்மங்கள், பூசாரியின் நீதி தர்மங்களிலிருந்துமாறுபட்டவை''

''நீதி, நியாயம் இவைகளை நிலைநிறுத்த ஒரு ஞானியின் புனிதத்தன்மை போலவே, [illegible] முறையானது''

## சூரத் காங்கிரஸ்

1907ல் டிசெம்பரில்கூடிய சூரத் காங்கிரஸ் பேரவைக் கூட்டம், மிதவாதிகளுக்கும் தீவிரவாதிகளுக்குமிடையேயான சண்டைக்களமாகப் போய்விட்டது. மகாராஷ்டிரத்திலிருந்து தீவிரவாதிகளின் தளகர்த்தராக திலகர் வந்திருந்தார். தமிழ் நாட்டிலிருந்து தீவிரவாதிகளாக மகாகவிபாரதியார், வ.உ.சி. சர்க்கரைச்செட்டியார் முதலியோர் வந்திருந்தனர். கல்கத்தாவிலிருந்து அரவிந்தர் தமது தொண்டர்களுடன் சென்றிருந்தார். மிதவாதிகள். தரப்பில், கோகலே, காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ராஷ்பிகாரி கோஷ், வி. கிருஷ்ணசாமிஐயர் ஆகியோர் இருந்தனர். இந்த மாநாடு குழப்பத்தில் முடிவடைந்த பின்னர், அரவிந்தர் பம்பாய். பரோடா, மத்தியப்பகுதிகளில்சுற்றுப்பயணம்செய்துவிட்டு, கல்கத்தா திரும்பி. ''வந்தே மாதரம்'' இதழில் 'சாவா, வாழ்வா' என்ற தலைப்பில் தொடர்கட்டுரைகள் எழுதினார். இதே சமயத்தில் கவிதைகளும் எழுதி வந்தார்.

## தீவிர இயக்கம்

'யுகாந்தர்' 'அனுசிலன் சமிதி' முதலிய நிறுவனங்களைச் சேர்ந்த புரட்சிவாதிகள், வெடிகுண்டு தயாரிப்பிலும், தலைமறைவுப் புரட்சி வேலைகளிலும் ஈடுபட்டிருந்தனர். 1907ல் வங்காள லெப்டினன்ட் கவர்னர் சர் ஆஸ்ட் பிரேசரைக் கொல்ல எடுக்கப்பட்ட ஒரு முயற்சி பலிக்கவில்லை. வெடிகுண்டுகள் தயாரிப்பதில் பயிற்சி பெற்றுவர ஒருவரை பிரான்சுக்கும் அனுப்பினர், பயிற்சி பெற்றவர் திரும்பி வந்ததும், கல்கத்தாவுக்கு அருகே மாணிக்கதோலா தோட்டத்தில் வெடிகுண்டு தயாரிப்பதில் மும்முரமாக ஈடுபட்டனர், நாட்டுப்பற்றையும். நாட்டுப்பணியையும் இறைவனின் ஆணை எனக்கருதிய அரிய குணநலம்படைத்த பல இளைஞர்கள் அன்று அவ்வேலைகளில் ஈடுபட்டிருந்தனர். அரவிந்தரின் கடைசித்தம்பி வரீந்திரர் இதில் தீவிரப் பங்கு எடுத்துக்கொண்டார்.

## கைதானார்

புரட்சிவாதிகள் பிரசிடென்சி மாஜிஸ்ரேட்டாக இருந்த ஒரு ஆங்கிலேயர் மீது குறிவைத்து வீசிய வெடிகுண்டு குறிதவறி இரண்டு ஐரோப்பிய பெண்களின் உயிரைப் பறித்தது. இதன் தொடர்பாக அநேகர் கைதுசெய்யப்பட்டனர். மாணிக்கதோலா தோட்டம் சோதனையிடப்பட்டது. சில ஆயுதங்களும் வெடிமருந்துப் பொருட்களும் கைப்பற்றப்பட்டன. வரீந்திரர் கைதானார். 1908 மே 5ம் திகதி அரவிந்தரையும் விலங்கிட்டுக் கைது செய்தனர் இதனால்நாடெங்கும் பெரும்பரபரப்பு ஏற்பட்டது.

## அலிப்பூர் சதிவழக்கு

அரவிந்தர் மீதும் மற்றவர்கள் மீதும் வழக்கு ஆரம்பமாகியது. இதுவே அலிப்பூர் சதிவழக்கு எனநாடெங்கும பிரபலமடைந்தது.

அரவிந்தர் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் படித்தபோது அவருடன் படித்தவரும், பின்பு நீதிபதி ஆனவருமான பீச்சிராப்ட் செஷன்ஸ் நீதிபதியாக விசாரணையை மேற்கொண்டார். அரசு தரப்பில், புகழ்பெற்ற வழக்குரைஞர் இயர்ட்லி நார்ட்டன் வாதாடினார். பிற்காலத்தில் மாபெரும் தேசியத்தலைவராகவும், வழக்குரைஞராகவும் புகழடைந்த சித்தரஞ்சன்தாஸ் அரவிந்தர் தரப்பில் வாதாடினார். வழக்கு ஆறுமாதகாலம் நடைபெற்றது. 206 சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். 4000 ஆவணங்கள், வெடிகுண்டு, மற்றும் கருவிகள் போன்ற 5000 சாட்சிப்பொருட்கள் விசாரணையில் இடம்பெற்றன. அரவிந்தர் தம் துணைவிக்கு எழுதியகடிதங்களும் காட்சிப் பொருட்களாக வைக்கப்பட்டன. இவ்வளவும் இருந்தும், அரவிந்தர் மீது கொண்டுவந்த குற்றச்சாட்டை அரசுதரப்பினால் நிரூபிக்கமுடியவில்லை; அரவிந்தர் தாம் யாதொரு அறிக்கையும் சமர்ப்பிக்க விரும்பவில்லை யென்றும், தமது வழக்கு முழுவதையும் வழக்குரைஞரிடம் ஒப்படைத்துவிட்டதாகவும்கூறிவிட்டார்.

## அரசுவாதம்

இந்த வழக்கு விசாரணையில் அரசுதரப்பு வழக்குரைஞர் நார்ட்டன் தமது வாதத்தில் குறிப்பிட்டது வருமாறு;—

'பூரண சுதந்திரம்வேண்டுமென்று போதனை செய்வது குறித்து எவரும் வெட்கமடையத்தேவையில்லை, எனக்குத்தெரிந்தவரை அவ்விதபோதனைக்கு எதிராக எந்த ஆங்கிலேயனும் ஒரு வார்த்தைகூட சொன்னதில்லை. அரசியல் சுதந்திர வேட்கை•பிழை யென்று யாரும் சொல்லமாட்டார்கள். அரசியல் சுதந்திரம் வேண்டுமென்ற கருத்தை மனதில் ஒளியுறும் வண்ணமாகக்கொண்டு, அதன் பொருட்டே வாழ்க்கை நடத்துவதும், பணியாற்றுவதும் நியாயமே. தங்கள் தினசரி அலுவல்களுக்கு அச்சிந்தனையையே ஆதாரமாகவும் தங்கள் தார்மீக விருப்பத்துக்கு அதனையே அளவாகவும் கொண்டிருப்பது நியாயமே, இதை நாங்கள் அனைவரும் ஒரே மனதுடன் ஏற்றுக்கொள்ளுகிறோம். அதே நேரத்தில் இந்த வேட்கைகளை நிறைவேற்றும் பொருட்டு இப்பேற்றை அடையும் பொருட்டு, நான் இப்போது விவரித்துவரும் கொலைச் செயல்கள் போன்றவற்றில் ஈடுபடுதல் சரியென எவரும் ஒப்பமாட்டார்கள்.''

## சித்தரஞ்சன் பதில்

சித்தரஞ்சன்தாஸ் தமது எதிர்வாதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டார்:—

''ஓரிரு ஆங்கிலேயரின் மீதோ, அங்குமிங்குமாக பல்வேறு இடங்களில் ஒரு சில ஆங்கிலேயரின் மீதோ வெடிகுண்டுகள் வீசுவதால், பிரிட்டிஷ் ஆட்சியைக்கவிழ்த்துவிட முடியும் என்று அரவிந்தர் ஒருக்காலும் நம்பியிருந்திருக்க முடியாது. அவர் அறிவாற்றல்மிக்கவர் என்றும்,மேதாவிலாச படைத்தவர் என்றும் அரசுதரப்பிலேயே கூறினர்கள். அதே மூச்சில் இச்சிறுபிள்ளைத்தனமான சதிக்கு, பொம்மைப் புரட்சிக்கு, அவர் தலைமை வகித்தார் என்று எங்ஙனம் கூறமுடியும்?''

முடிவில் அரவிந்தர் குற்றவாளியல்லர் எனத் தீர்ப்

—6-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மாணவரின் உயர் கல்வியை வெட்டியெறிய மீண்டும் முயற்சி?

கடந்த ஏழு ஆண்டுகளாக 'தரப்படுத்தல்' எனும் படுமோசமான இன பேதத் திட்டத்தினல் திறமை வாய்ந்த தமிழ் மாணவர்களின் உயர்கல்வி வாய்ப்புக்கள் முற்ருக பறிக்கப்பட்டன. தன்னை ஒரு தார்மீக அரசு என்று கூறிக் கொள்ளும் ஜே. ஆர். அரசு ஆட்சி பீடமேறியதும், இந்தத் தரப்படுத்தல் முறை நீக்கப்பட்டு விட்டதாகக் கூறப்பட்டது. தமிழ் மாணவர்கள் தமது திறமையின் அடிப்படையில் பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்டனர்; சிங்கள மாணவர்களை விட சில துறைகளில் தமிழ் மாணவர்கள் தமது திறனை வெளிப்படுத்தி பல்கலைக்கழகத்தில் கூடுதலான இடங்களைப் பிடித்துக்கொண்டனர். இதைப் பொறுத்துக் கொள்ளமுடியாத 'தார்மீக' அரசு, இப்போது தமிழ் மாணவ மாணவியர் மீதும், அவர்களது பரீட்சைத்தாள்களைத் திருத்தியவர்கள் மீதும் பழி சுமத்தி, சேற்றை வாரி வீசத் தொடங்கியுள்ளது. மீண்டும் எப்படியாவது தமிழ் மாணவர்கள் பல்கலைக் கழகத்தில் கூடுதலாக இடம் பெறுவதை தடை செய்வதற்கும், சிங்கள மாணவர்களை நுழைப்பதற்கும் திட்டம் தீட்டப்படுகிறது.

அண்மையில் தேசிய அரசுப் பேரவையில் கைத்தொழில் விஞ்ஞான அமைச்சர் சிறில்மத்தியூ இது சம்பந்தமாக ஆற்றிய உரை, தமிழ் மாணவ மாணவியர் மீதும், அவர்களது பரீட்சைத்தாள்களைத் திருத்திய தமிழர்கள் மீதும் வீண்பழிசுமத்துவதாக அமைந்திருக்கக் காணப்பட்டது.

தமிழ் மாணவ மாணவியருக்கு பரீட்சையில் விசேட சலுகைகள் காட்டப்படுவதாக அமைச்சர் ஒரு குற்றச்சாட்டை வீசியிருக்கிருர்.

"தமிழ் மொழி மூலம் தோற்றும் உயர் வகுப்பு மாணவர்களுக்கு 3 வழிகளில் விசேட சலுகைகள் வழங்கப்படுகின்றன.

"தமிழ் மொழி மூலம் தோற்றும் உயர்வகுப்பு மாணவர்களின் பரீட்சை விடைத்தாள்களைத் திருத்தும் தமிழ் ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள், விடைத்தாள்களுக்கு கூடுதலான புள்ளிகளை அளிக்கின்றனர்.

"மேலும் கூட்டுறவுக் கடைகளிலிருந்து பொருட்கள் களவு போவது போல் பரீட்சை வினுத்தாள்களும் களவு போகின்றன.

"மூன்ருவதாக, உயர் வகுப்பு தமிழ் மாணவர்களுக்கு கற்பிக்கும் தமிழ் ஆசிரியர்கள் மாணவர்களைக் கூட்டிக் கருத்தரங்குகள் நடத்துகின்றனர். இக்கருத்தரங்கில் மாதிரி வினுக்கள் என்ற பெயரில் மாணவர்களுக்குவினுக்களும், அதற்கேற்ற விடைகளும் சொல்லித் தரப்படுகின்றன. அதே கேள்விகள் பின்னர்பரீட்சை வினுத்தாள்களிலும் இடம் பெற்று விடுகின்றன.

"இவ்விதம் மூன்று வழிகளில் தமிழ் மொழி மூலம் கற்கும் மாணவர்கள் பயன் அடைகின்றனர் புறக்கோட்டை வியாபாரிகளைப் போல"

—இவ்வாருக கஷ்டப்பட்டுப் படித்து தமது திறமையால் முன்னேறும் தமிழ் மாணவ மாணவியர் மீது அநியாயமாகப் பழி சுமத்தியிருக்கிருர் அமைச்சர் சிறில் மத்தியூ.

அதாவது தமிழருக்குத் தமிழர் இன அடிப்படையில் சட்ட விரோதமாகவும், முறை கேடாகவும் உதவி செய்கின்றனர் என்பதே அமைச்சர் கக்கியுள்ள அபாண்டமாகும்.

நாம் அமைச்சரைக்கேட்க விரும்புகிறேரும்—

இந்த நாட்டின் ஆட்சிப் பொறுப்பு உங்கள் கைகளிலேயே இருக்கிறது. இந்த நாட்டின் நிர்வாகம் உங்கள் கைகளிலேயே இருக்கிறது. கல்வித்திணைக்களம் உங்கள் கைகளிலே இருக்கிறது.

உங்கள் ஆட்சியில் நீங்கள் சொல்வதுபோல தவறுகள், முறைகேடுகள் ஊழல்கள் இடம்பெறுமாளுல், அதற்கு யார் பொறுப்பு? நீங்களும், உங்கள் அரசும் அல்லவா?

உங்கள் ஆட்சியின் நிர்வாகத் திறமையின்மையை, கையாலாகாத்தனத்தை, மூடிமறைத்து, இன அடிப்படையில் தமிழர்கள் மீது ஏன் பழி போடுகிறீர்கள்?

ஏதோ தமிழன்தான் நாட்டையே ஆள்வது போலவும், தமிழனுக்குத் தமிழன் இனரீதியாகச் சலுகை செய்வது போலவும் ஏன் கூப்பாடு போடுகிறீர்கள்.

இங்கொன்றும் அங்கொன்றுமாக சில தவறுகள், அல்லது, ஊழல்கள் நடந்துவிடுவதாக வாதத்துக்காக வைத்துக்கொண்டாலும், அந்தத் தவறுகளை நிவர்த்திக்க வழிவகை காணவேண்டுமே தவிர — இன அடிப்படையில் தமிழன் தமிழனுக்கு உதவுகிருன், புள்ளிகளை அள்ளிப் போடுகிருன் என்று சத்தம் போடுவதன் பின்னணி நோக்கம் என்ன?

பரீட்சைத்திணைக்களம் உங்கள் கைகளில்; பரீட்சை நடத்துவது நீங்கள்: இந்நிலையில் பரீட்சைத்தாள்கள் களவு போகிறதென்ருல் அதற்கு யார் பொறுப்பு? உங்கள் நிர்வாகம் அல்லவா? அந்த நிர்வாகத்தை சீராக்குவதை விடுத்து, தமிழர்களுக்கெதிரான துவேஷத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்துவதற்கு இதைப் பயன்படுத்துவதேன்?

தமிழ் மாணவ மாணவியருக்கு தமிழ் ஆசிரியர்கள் இன அடிப்படையில் புள்ளிகளை அள்ளிப்போட்டு கை தூக்கி விடுகிருர்கள்; அதற்குப்போட்டியாக சிங்கள ஆசிரியர்களும், அதேபோல சிங்கள மாணவ மாணவியருக்கு இன அடிப்படையில் புள்ளிகளை அள்ளிப்போட்டு அவர்களை தூக்கி விடவேண்டும் என்றுசிங்களஇன உணர்வை முடுக்கி விடுவதுதான் அமைச்சர் மத்தியூவின் நோக்கமோ என்று நாம் சந்தேகிக்க வேண்டியுள்ளது.

இல்லாவிட்டால், இந்தப் பிரச்சினைக்கு இவ்வளவு அழுத்தம் கொடுத்து— இன அடிப்படையில் இதை அணுகுவானேன்?

இரவு பகலாகக் கஷ்டப்பட்டுப்படித்து திறமையின் அடிப்படையில் சித்தியடையும் தமிழ் மாணவ மாணவியரின் முயற்சிக்கும் திறமைக்கும் அமைச்சர் களங்கம் கற்பிப்பதும், நடுநிலை நின்று பணியாற்றும் தமிழ் [illegible] மொத்தமாக பழிசுமத்துவதும் தார்மீக நெறிதானு என்று கேட்கிருேம்.

எங்கோ, எப்படியோ ஒரு சிலர் முறைதவறி நடந்திருந்தாலும் கூட, அதற்காக ஒரு முழுச்சமுதாயத்தின்மீதும் சேற்றை வாரி வீசுவதா புத்தன் நெறியென்று அமைச்சர் மத்தியூவிடம் கேட்கவிரும்புகிருேம்.

1977ம் ஆண்டு நடைபெற்ற பொதுவிஞ்ஞான தராதரப் பரீட்சைக்கு பேராதனைப்பல்கலைக்கழகத்திலிருந்து தோற்றிய 45 சிங்கள மாணவர்களில் ஆக 2 பேர் 'A' தரத்திலும், 35 பேர் 'B' தரத்திலும், 8 பேர் 'C' தரத்திலும் சித்தியடைந்துள்ள அதே வேளையில் மேற்படி பரீட்சைக்குத் தோற்றிய 12 தமிழ் மொழி மூல மாணவர்களில் பத்துப்பேர் 'A' தரத்திலும், 2பேர் 'B' தரத்திலும் சித்தியடைந்துள்ளதாகவும் இந்த 'முரண்பாடு' பற்றி விசாரணை நடத்தப்படவிருப்பதாகவும் ஒரு செய்தி கூறுகிறது.

அதாவது சிங்களவர்களை விட தமிழர்கள் திறமையுடன் பரீட்சைகளில் சித்தியடைவதையோ, முன்னேறுவதையோ எந்தவிதத்திலும், தமிழ் மாணவர்களை முன்னேறவிடாது, முட்டுக்கட்டைபோடுவதே ஆட்சியாளர்களின்நோக்கமாகும்.

தரப்படுத்தலை அகற்றினர்கள்— தடைபட்டுக்கிடந்த தமிழ் மாணவன் தன் திறமையை வெளிக்காட்டுகிருன் அதைப் பொறுத்துக்கொள்ள முடியாமல், இப்போது வெவ்வேறு கதைகள், வியாக்கியானங்கள், கற்பிக்கப்படுகின்றன.

பழையபடி தமிழ் மாணவர்களை பின்னுக்குத்தள்ளவும், சிங்களமாணவர்களை கைதூக்கிவிடவும் வழிவகையென்ன என்று ஆராயப்படுகிறது.

மீண்டும் தரப்படுத்தலைப் புகுத்தலாமா? அல்லது தரப்படுத்தலையும் விட மோசமான வேருேர் முறையைப் புகுத்தி, தமிழ் மாணவர்களின் உயர்கல்வியை வேரோடு பிடுங்கியெறியலாமா என்று சிந்திக்கப்படுகிறது?

திறமை அடிப்படையைத் தவிர்த்து இன அடிப்படையில்—சனத்தொகை அடிப்படையில் . பல்கலைக்கழகத்துக்கு மாணவர்களை அனுமதிக்கலாமா—இந்த முறையைக் கையாள்வதன் மூலம் தமிழ் மாணவர்களின் பல்கலைக்கழகக் கல்வியை மட்

# சிறில் மத்தியூவின் சிங்கள இனவாத 'சுவிசேஷம்'

சிங்களவர்களால் ஜீரணித்துக் கொள்ளமுடியவில்லை யென்பது தான் இதன் பொருளாகும்,

இந்தக் கூப்பாடுகளின் பின்னணி நமக்கு விளங்குகி

—8-ம் பக்கம் பார்க்க


## சுதந்திரன்
[வாரமிருமுறை]

### வெளிநாடுகள் — சந்தா விபரம்

( இலங்கை நாணயப்படி )

இந்தியா

| | | | |
|---|---|---|---|
| விமான மார்க்கம் | (ஓராண்டு) | ரூபா | 226.00 |
| ,, ,, | (அரையாண்டு) | ,, | 113.00 |
| கடல் மார்க்கம் | (ஓராண்டு) | ,, | 100.00 |
| ,, ,, | (அரையாண்டு) | ,, | 50.00 |

மலேசியா, சிங்கப்பூர், மத்தியகிழக்கு நாடுகள்

| | | | |
|---|---|---|---|
| விமான மார்க்கம் | (ஓராண்டு | ரூபா | 260.00 |
| ,, ,, | (அரையாண்டு) | ,, | 130.00 |
| கடல் மார்க்கம் | (ஓராண்டு) | ,, | 100.00 |
| ,, ,, | (அரையாண்டு) | ,, | 50.00 |

லண்டன், அவுஸ்திரேலியா

| | | | |
|---|---|---|---|
| விமான மார்க்கம் | (ஓராண்டு) | ,, | 320.00 |
| ,, ,, | (அரையாண்டு) | ,, | 160.00 |

அமெரிக்கா

| | | | |
|---|---|---|---|
| விமான மார்க்கம் | (ஓராண்டு) | ,, | 362.00 |
| ,, ,, | (அரையாண்டு | ,, | 181.00 |

அனுப்பவேண்டிய முகவரி:

நிர்வாகி சுதந்திரன்.
15, மகாத்மாகாந்தி வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவா! வருக!!

தமிழ் ஈழத்தின் விடுதலைப் போராட்டம் வெற்றியடைவதற்கு உலக நாடுகளின் அபிப்பிராயம் அதற்கு சாதகமாக இருக்கவேண்டியது இன்றியமையாதது. உலக அபிப்பிராயத்தை நமக்குச் சாதகமாகத்திருப்புகின்ற பணி சுலபமானதொன்று அல்ல!

பொதுவாக, ஓர் அரசு கூறுகின்ற விளக்கங்களையும் வியாக்கியானங்களையுமே இன்னோர் அரசு கேட்கும். அது மட்டுமன்றி உலக நாடுகளால் தற்போது அங்கீகரிக்கப்பட்டுள்ள சிறீலங்கா அரசுக்கு இருக்கின்ற அதிகாரமும் வசதி வாய்ப்புக்களும், சிறீலங்காவினால் அடக்கியாளப்பட்டுவரும் தமிழ் ஈழத்துக்கு அறவே கிடையாது. இந்நிலையில் சர்வவல்லமையும். வசதிவாய்ப்பும்கொண்ட சிறீலங்கா அரசின் பொய்ப் பிரசாரங்களை முறியடித்து, தமிழ் ஈழமக்களின் விடுதலைக் கோரிக்கையை உலக அரங்கின் முன்னணிக்கு கொண்டு வருவது இலகுவான காரியமன்று.

அப்படியிருந்தும் லண்டனிலும் ஏனைய வெளிநாடுகளிலுள்ள தமிழீழ விடுதலை அணிகள், தமது நேரம், நினைப்பு, உழைப்பு அத்தனையையும் தியாகம் செய்து, விடாப்பிடியாகவும், தொடர்ச்சியாகவும், உலகின் பல்வேறு மொழிகளில் விடுதலைப்பிரசுரங்களை வெளியிட்டும் விநியோகித்தும், நேரடி நடவடிக்கைகளில் இறங்கியும், நேரடியாக விளக்கியும், சிறீலங்கா அரசாங்கமே அலமந்து அலறும்வகையில் வேகமாக பிரசார இயந்திரத்தை முடுக்கி விட்டு வருவதை நாம் அறிந்து இருக்கிறோம்; அவர்களை நெஞ்சு நிறைய பாராட்டவும் செய்கிறோம்.

அண்மையில் ஐ. நா. பொதுச்சபையில் புகுந்து திரு. வைகுந்தவாசன் எழுப்பிய தமிழீழ விடுதலைக்குரல் உலக நாடுகளின் கவனத்தை மேலும் எமது பிரச்சினையின்பால் ஈர்க்க வைத்துள்ளது என்பதையும் நாம் இங்கு குறிப்பிட வேண்டும்.

இதே சமயம், கடந்த இரண்டு திங்களுக்குச்சற்று அதிகமாக மேற்கு நாடுகளில் தமது தமிழ்ஈழ விடுதலைப் பிரசார யாத்திரையை மேற்கொண்டிருந்த எதிர்க்கட்சித் தலைவரும் தமிழர் விடுதலைக்கூட்டணியின் வழிகாட்டியுமான திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் கடந்த திங்களன்று (13-11-78) சிறீலங்காவின் தலைநகருக்கு வந்துள்ளார். இந்த வாரம் அவர் தமது தாயகமான தமிழ் ஈழத்துக்குத் திரும்புகிறார்!

சிறீலங்காவில் அவர் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்துள்ள செவ்வியைப்படிக்கும் போது, திரு. அமிர்தலிங்கத்தின் வெளிநாட்டு விஜயம், தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு சர்வதேச ஆதரவைத்திரட்டும் பணியில் ஒரு மைல்கல்லாக அமைந்துள்ளதென்பதை அவதானிக்க முடிகிறது.

இங்கிலாந்து, ஜமேய்க்கா. ஐக்கிய அமெரிக்கா. கனடா. மேற்கு ஜெர்மனி. பிரான்ஸ் ஆகிய ஆறு நாடுகளுக்கு விஜயம் செய்திருந்த தலைவர் அமிர்தலிங்கம். அங்கெல்லாம் சிறீலங்கா அரசின் பொய்ப்பிரசாரங்களை உடைத்தெறிந்து, தமிழ் இனத்தின் உண்மையான நிலையையும், தமிழீழ விடுதலையில் அவர்கள் கொண்டிருக்கும் உறுதியையும் எடுத்து விளக்கி இருக்கிறார்.

மேற்கத்திய நாடுகள் தாம் தெரிந்தோ தெரியாமலோ— தமிழ் தேசிய இனத்தை சங்காரம் செய்து வரும் சிறீலங்கா அரசுக்கு பெருந்தொகையான நிதியையும் ஏனைய உதவிகளையும் வாரி வழங்குகிறது. எனவே அந்த நாடுகளிலேயே உடனடியாக பிரசாரம் மேற்கொண்டு சிறீலங்கா அரசின் இனக்கொலையை அம்பலப்படுத்திட திரு. அமிர்தலிங்கம் மேற்கொண்ட முயற்சிகள் முற்றிலும் சரியானவையே!

**இலங்கையின் அபிவிருத்திக்கு என்று மேற்கு நாடுகள் சிறீலங்காவுக்கு வழங்கும் உதவிகள், இலங்கையில் தமிழ் இனத்தையும், அதன் மரபுவழித்தாயகத்தையும் அழிக்கும் இனக்கொலை நடவடிக்கைகளுக்கே பயன்படுத்தப் படுகின்றன என்பதை திரு. அமிர்தலிங்கம் அந்த நாடுகளின் கவனத்துக்கு கொண்டு வந்திருக்கிறார்.**

இது மட்டுமின்றி தாம் சென்ற வெளிநாடுகளில் வாழும் தமிழ் ஈழத்தவர்களைச் சந்திக்கவும், அவர்கள் தமிழ் ஈழ விடுதலையில் கொண்டிருக்கும் அக்கறையையும் ஆர்வத்தையும் அறிந்து கொள்ளவும் இந்த விஜயம் தலைவர் அமிருக்குப் பயன்பட்டிருப்பதுடன், அவர்களையெல்லாம் ஒரே அணியில் இணைத்து வெளிநாடுகளில் இயங்கக்கூடிய பலமான ஓர் அமைப்பாக தமிழ் ஈழ விடுதலை அணியொன்றை உருவாக்குகின்ற காத்திரமான கூறுகளுக்கும் அமிர் விஜயம் பயன்பட்டிருப்பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறோம்.

எதிர்க்கட்சித் தலைவர் என்ற கருவியை முழுமையாகப் பயன்படுத்தி வெளிநாடுகளில் தமிழீழ விடுதலைப் பிரசாரத்தை முழுமையாக மேற்கொண்டு— சிறீலங்கா அரசின் இனவாத இனக்கொலை நடவடிக்கைகளை அம்பலப்படுத்தி— சர்வதேச அரங்கில் ஒரு பலமான தாக்கத்தை ஏற்படுத்தி விட்டு தாயகம் திரும்பும் தலைவர் அமிர்தலிங்கம் அவர்களையும் திருமதி அமிர்தலிங்கம் அவர்களையும் தமிழ் ஈழ அன்னை வரவேற்கிறாள்; தமிழ் ஈழமக்கள் குதூகலத்துடன் வரவேற்கிறார்கள்; நாமும் வரவேற்கிறோம்.

தமிழ் ஈழ விடுதலைக்கு உலக நாடுகளின் ஆதரவை வென்று வரும் தலைவா! வருக! வருக!!

# "கூட்டணித் தலைமையை நாம் ஒருபோதும் கண்டிக்கவில்லை"

## பத்திரிகை செய்திகளுக்கு சந்ததியார் மறுப்பு!

மட்டக்களப்பு பாட்டாளிபுரத்தில் நடைபெற்ற தமிழ் இளைஞர் பேரவையின் பொதுக்கூட்டத்தில் தம்மால் பேசப்பட்டதாக சில நாளேடுகளில் வெளிவந்திருந்த செய்திகளை மறுத்து தமிழ் இளைஞர் பேரவையின் அமைப்புச் செயலாளர் திரு. சந்ததியார் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

13-10-1978 வீரகேசரி பத்திரிகையில் கூட்டணியில் இருந்து பிரிந்து தனித்தியங்குவோம் என்று வெளி வந்த செய்தி முற்றிலும் பொய்யானது. இவ்வாறு எந்தச் சந்தர்ப்பத்திலாவது மட்டுநகர் பாட்டாளிபுரம் மைதானத்தில் நடந்த கூட்டத்தில் யாருமே பேசவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணியின் தமிழீழம் அமைக்கும் கருத்து வெறும் கண்துடைப்பு என்று மேலும் அச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. இதனால் இளைஞர்கள் தனித்தியங்கத் தீர்மானித்து விட்டனர். என்று அப்பட்டமான பொய்யான செய்தியொன்றை வெளியிட்டிருக்கிறார்கள். பத்திரிகை நிருபரை யாரோ மடக்கி இளைஞர் பேரவையை சிதைக்க முயல்கிறார்கள் என்றே நாம் கருதுகிறோம்.

எமது பேச்சில் எச்சந்தர்ப்பத்திலும் கூட்டணியை கண்டித்ததோ, தலைமையை உதாசினப்படுத்தியதோ கிடையாது. கூட்டணியின் (தமிழினத்தின்) ஒற்றுமையைக் குலைக்கக் கூடாதென்றும் இளைஞர் பேரவை கூட்டணியின் தலைமையை ஏற்றுத் தனித்தியங்கும் என்பதையும், 25 ஆண்டுகால பாராளுமன்றத் தேர்தல்களாலும், பாராளுமன்றத்தாலும் தமிழர் பிரச்சினைகள் முற்று முழுதாகத் தீர்க்கப்படவில்லையென்றும், இளைஞர் பேரவை போட்டியின் அடிப்படையிலான தேர்தல்களிலே கலந்து கொண்டு ஒற்றுமையை சிதைப்பதற்கு விரும்பாததால் தேர்தல்களில் பங்குபற்றாது என்பதையும் கூறியிருந்தோம்.

தேசியக்கட்சிகளால் நாங்கள் ஏமாந்த வரலாற்றுச் சம்பவங்களை ஆதாரம் காட்டி தெளிவுபடப் பேசியிருந்தேன். தமிழினத்தின் ஒற்றுமையே முக்கியம் விடுதலைக்கு ஐக்கியம் அவசியம். அதற்குரிய அமைப்பாக இளைஞர் பேரவை இருக்கும் எனவும் கூறினேன்.

மட்டுநகர் தினபதி, வீரகேசரி பத்திரிகை நிருபர்களுடைய இத்தகைய பிழையான செய்தியை கண்டிக்கிறோம். இதற்குப் பின்னணியில் யாரோ செயல்பட்டுள்ளார்கள். இது தொடர்பாக வீரகேசரி பிரதம ஆசிரியருக்கு பதிவுத்தபாலில் மறுப்பு ஒன்றை அனுப்பியுள்ளேன். அவர்கள் மேற்படி மறுப்பை முக்கியத்துவம் கொடுத்து பிரசுரிப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

## பல்கலைக்கழக அனுமதி இனி இனவாரி முறையிலா?

பல்கலைக் கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதில், திறமையடிப்படையைக் கைவிட்டு இனவாரி முறையைப் பின்பற்றுவது பற்றி தார்மீக அரசாங்கம் இப்போது ஆலோசித்துவருவதாகத் தெரியவருகிறது.

அண்மையில், இலங்கைப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சிறிவர்த்தனவும் இதே கொள்கையை வலியுறுத்தியிருக்கிறார்.

''தரப்படுத்தல் முறை ஒரு பாதுகாப்பான முறையாகக் காணப்படவில்லை. இதில் கூடுதலாகப் புள்ளிகள் போடுவது போன்ற முரண்பாடுகள் ஏற்பட்டுவிடுகின்றன. ஆகவே மாணவர்களை மொழிவாரியாகப் பிரித்து, பின்னர் பாடவாரியாகத்தரப்படுத்தி, அதன் பின்னர் ஒவ்வொரு இனத்தினதும் எண்ணிக்கையின் அடிப்படையில் பல்கலைக்கழகங்களில் இடம் ஒதுக்கப்படவேண்டும்'' என்று திரு. சிறிவர்த்தன 13-11-78 டெயிலிநியூஸ் பத்திரிகையில் வலியுறுத்தியிருக்கிறார்.

எல்லா சாதியினரையும், இனத்தினரையும், மொழியினரையும் பாரபட்சமின்றி ஒரே கண்ணோடு நோக்கி வருவதாகக் கூறிக்கொள்ளும் ஜே. ஆர். அரசு, இந்த இனவாத அடிப்படையை ஏற்றுக்கொள்ளப் போகிறதா என்பதே இன்றுள்ள கேள்வியாகும்.

## தந்தை காட்டிய வழிகளில் போராடி வெற்றியடைவோம்

### வவுனியா சிவா உறுதி!

"எத்தனை தடைகள் வந்தாலும் தொடங்கிய எமது வேலைகளை முடித்தே தீருவோம். எமது பிரதேசத்தில் ஓர் அங்குலத்தையும் நாம் விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை. தந்தை செல்வா காட்டிய சாத்வீகப் போராட்டத்தினால் வெற்றியை அடைவோம். அதற்கு ஆயிரம் ஆயிரம் இளைஞர்கள் தயாராக இருக்கிறார்கள்"

—இவ்வாறு வவுனியா அரசாங்க அதிபரினால் திருப்பணி வேலைகள் தடுத்து நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் சமளங்குளம் விநாயகர் ஆலய ஐப்பசி வெள்ளி உற்சவத்தில் கலந்து கொண்டு பேசிய வவுனியா பா. உ. திரு. தா. சிவசிதம்பரம் முழக்கமிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:-

''கைலைவன்னியன் காலத்திலிருந்து இவ்வாலயம் இந்துக்களுக்கு சொந்தமாக இருந்து வந்திருக்கிறது. பின்னர் போர்த்துக்கீசியர் காலத்தில் இடிக்கப்பட்ட கோவில்களில் இதுவும் ஒன்றாகும். ஆனால் இன்று திரும்பவும் அந்தக் கோவிலைத் திருத்த முடியாதவாறு அரசாங்க அதிபர் [illegible] நிலையத்திலிருந்து அறிக்கை வரும் வரை தடை விதித்துள்ளார். எமது எல்லைப் பிரதேசத்தில் ஓர் அங்குல நிலத்தையேனும் நாம் விட்டுக்கொடுக்கத்தயாராக இல்லை!''


## இப்பொழுது கிடைக்கிறது!

தமிழர்களுக்கு தனியரசு இருந்ததா என்று கேட்போருக்கு மறுக்கொணா வரலாற்று ரீதியான பதில்—

கலாநிதி சி பத்மநாதன்
அவர்கள் எழுதிய

KINGDOM OF JAFFNA
(யாழ்ப்பாண அரசு)

ஆங்கில நூல்

விலை தனிப்பிரதி ரூபா 30.00
வியாபாரிகளுக்கு இருபது விதம் கழிவு கொடுக்கப்படும்.

கிடைக்குமிடங்கள்:

(1) அருள் மா. இராசேந்திரம்.
111, பிக்கறிங்ஸ் வீதி, கொழும்பு-13.
(2) சுதந்திரன்,
15, மகாத்மா காந்தி வீதி, யாழ்ப்பாணம்.
(3) காந்தளகம்,
213, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் மடல்

# பெயர்-அபிவிருத்தி செயல்-அபகரிப்பு!

அன்பு நண்பா,

பிரதேச அபிவிருத்தி
மாவட்ட அபிவிருத்தி
தொகுதி அபிவிருத்தி

என்று இவ்வாறு 'அபிவிருத்தி அபிவிருத்தி' என்ற சொற்களே இப்போது சில காலமாகப் பலமாக அடிபட்டு வருவதைக் கவனித்திருப்பாய்! தேசிய அரசுப்பேரவையென்றாலும், அமைச்சர் கூடுமிடங்கள் என்றாலும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பேசுமிடங்களில் என்றாலும் இந்த 'அபிவிருத்தி' என்ற ராகமே எங்கும் ஒலித்து வருவதையும், நாளேடுகளிலும் அதுபற்றியே எழுதப்படுவதையும் நானும் ஊன்றிக்கவனித்துக் கொண்டுதான் வருகின்றேன்.

தமிழ் ஈழத்தின் விடுதலையொன்றையே மூலாதார முழுமுதற் கொள்கையாகக் கொண்டு நாடாளுமன்றம் சென்றிட்ட நமது கூட்டணி பா. உக்களும் கூட கொள்கையை விட்டுக்கொடாமல் அபிவிருத்திக்கு ஒத்துழைப்போம் என்று முழங்குவதை கேட்கின்றோம்.

இதிலென்ன தவறு, அபிவிருத்தி நடைபெறத்தானே வேண்டும்; அதுபற்றியே அனைவரும் பேசுவதும் அக்கறை செலுத்துவதும் ஆகாததொன்றல்லவே; நல்ல பணிகளை ஆதரித்திடத்தானே வேண்டும்; இதிலும் கூடவா உனக்குக் குறுகிய கண்ணோட்டம், குதர்க்கம் என்றெல்லாம் நீ கேட்டிடக் கூடும்!

உண்மைதான் நண்பா, அரசியல் விடுதலையை ஈட்டிக் கொண்டுவிட்ட ஒரு நாட்டுக்கு அடுத்தது அபிவிருத்திதான்—பொருளாதார விடுதலைதான் என்பதிலே இரண்டுபட்ட கருத்துக்கு இடமில்லை; ஆனால் அரசியல் விடுதலையை நாடி நிற்கும் இனத்துக்கு—அடிமைத்தளையில் சிக்குண்டு கிடக்கும் மக்களுக்கு— தனது நாட்டு அபிவிருத்திபற்றிச் சிந்தித்துக்கொண்டு இருக்கமுடியும் என்று நான் நினைக்கவில்லை!

அரசியல் விடுதலையை ஈட்டியதும் அடுத்துச் செயற்படுத்தப்படவேண்டிய பொருளாதாரத்திட்டங்களை ஒரு விடுதலை இயக்கம்உருவாக்கிவைத்துக்கொள்ளத்தான்வேண்டும்; ஆனால் அதே நேரத்தில், நம் இனத்தையும் நாட்டையுமே முற்றாக அழித்தொழித்துவிட, விழுங்கி ஏப்பம்விட்டு விட— இமைப்பொழுதும் தூங்காது திட்டம் தீட்டிவரும் நமது எதிரிகள் நம் நாட்டை அபிவிருத்திசெய்வார்கள் என்றுநம்பி, அவர்களுடன் ''அபிவிருத்திக்காக ஒத்துழைப்போம்'' என்று பேசுவதும் அவ்வாறு செயற்படுவதும் உண்மையிலேயே தூர நோக்கும் தீர்க்கதரிசனமும் படைத்த செயலாகக் காணப்படவில்லை!

நம் தாய்த்திருநாட்டை— தமிழ் ஈழ மண்ணை—அபகரிப்பதற்கு சிங்கள ஏகாதிபத்தியம் தீட்டும் பல்வேறு தந்திரோபாயங்களில் ஒன்றுதான் இந்த ''அபிவிருத்தி'' என்ற கோஷமாகும்.

**'குளோரோபோம்' என்ற மயக்க மருந்தை காவல்காரனுக்குக் கொடுத்துவிட்டு, திருடன் சுலபமாக வீட்டைக் கொள்ளையடிப்பதுபோல-'அபிவிருத்தி' என்ற இனிப்பான கோஷத்தினால் நமது மக்களையும் தலைவர்களையும் மயக்கிவிட்டு தமிழ் ஈழத்தை சுலபத்தில் சிங்களமயமாக்கி விடவே சிங்கள யூ. என். பி. அரசாங்கம் திட்டமிடுகிறது. இது வெறும் கற்பனையல்ல—கடந்த கால அனுபவம்!**

கிழக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்கிறோம் என்று கூறிக்கொண்டுதான், அம்பாறைத்திட்டத்தையும், அல்லை, கந்தளாய்த் திட்டங்களையும் ஐக்கியதேசியக்கட்சி அரசு ஆரம்பத்தில் உருவாக்கியது. அந்த நேரத்தில் தந்தைசெல்வாவும், அமரர் வன்னியசிங்கமும் எச்சரிக்கைக் குரல் கொடுத்தார்கள்— இது அபிவிருத்தியல்ல அபிவிருத்தியென்ற போர்வையில் தமிழ்பேசும் மக்களின் பாரம்பரியப் பிரதேசம் பறிக்கப்படப் போகிறது என்று கூறினார்கள்—அத்தலைவர்கள்! கிழக்கு மாகாணம் அபிவிருத்தியடைவதை வட மாகாணத்தைச்சேர்ந்த இவர்கள் வேண்டுமென்றே எதிர்க்கிறார்கள்— இவர்கள் கூறுவதெல்லாம் பொய்—என்று அரசு கூறியதுடன் தமிழ் மக்களிடையே பிரதேசப் பிரிவினையை மூட்டிவிட்டு, தனது சதித்திட்டத்தை —அதாவது 'அபிவிருத்தித்திட்டத்தை'— செயற்படுத்தியது.

இதன்பயன்— கிழக்குமாகாணத் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரியபூமி பறிபோனது; 2000 சதுரமைல் நிலப்பரப்பை இழந்தோம்; அம்பாறையும் சேருவிலவும் உருவானது; திருக்கோணமலை இன்று பறி போய்க் கொண்டிருக்கிறது.

இத்தனையும், யூ. என். பி. அரசின் 'அபிவிருத்தி' என்ற போர்வையின் மூடுதிரையின் பின்னால் நடந்துமுடிந்த திட்டமிட்ட இன ஒழிப்பு நடவடிக்கையாகும்!

இன்றைக்கும் அதே சதிகார யூ. என். பி. பதவியில் இருக்கிறது; வடக்கு கிழக்குமாகாணங்கள் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரியத் தாயகம் என்பதையும், தமிழினம் ஒரு தனித்தேசிய இனம் என்பதையும் ஏற்றுக் கொள்ள மறுக்கும் ஜே. ஆர், ஜெயவர்த்தன அதிகாரபீடத்தில் அமர்ந்திருக்கிறார்; எஞ்சியுள்ள தமிழர் தாயகத்திலும் சிங்களவரைக் குடியேற்றப்போவதாகவும் அவர் பகிரங்கமாக அறிவித்திருக்கிறார்!

இந்த நிலையில் 'அபிவிருத்தி' யென்று கூறப்படுவதெல்லாம் சிங்களவர்களை தமிழ் பிரதேசங்களில் சந்தடியில்லாமல் புகுத்துவதற்காக கையாளப்படும் ஒரு திட்டமிட்ட தந்திரோபயமே! திருகோணமலையில் 'அபிவிருத்தி'யென்று அரசாங்கம் பேசுமானால்— அமைச்சர்கள் அதிலே அக்கறை செலுத்துவார்களானால்-அதன்பின்னணியில் திருகோணமலையை முற்றுமுழுதாக சிங்களமயமாக்கும் திட்டமே காணப்படும். இதைப்போலத்தான் தமிழ் ஈழத்தில் சிங்கள அரசாங்கம் அபிவிருத்தி செய்வதென்பது—தமிழ் ஈழ மண்ணை சந்தடியின்றி அபகரிப்பதாகத் தான் இருக்கப் போகிறது!

அரசியல் விடுதலையைப் புறமொதுக்கி வைத்துவிட்டு—அரசின் அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு நல்குவோமானால் — அபிவிருத்தி முடிவடையும் காலத்தில், அரசியல் விடுதலைக்குப் போராடவேண்டிய தேவையே இருக்காது—ஏனெனில் நமக்கென்றோர் சொந்த நிலம் — நம் பூமி என்று சொல்லிக்கொள்வதற்கு ஓர் தாயகம்—இல்லாமலேயே போய்விடும்! இது வெறும் கற்பனையல்ல—கண்ணூற் கண்ட உண்மை! அம்பாறையும், அல்லையும், கந்தளாயும், சேருவிலவும் எதிரே தெரிகின்றன.

எனவே நமது தமிழ் ஈழத்தாயகத்தின் அரசியல் சுதந்திரத்தை, —இறைமையை — மீட்பதற்கு முன்பு 'அபிவிருத்தி' யென்று அரசுடன் சேர்ந்து நாமும் பேசுவது இறுதியில் ஒருதற்கொலை முயற்சியாகவே எனக்குத் தோன்றுகிறது.

இதை தமிழ் சமுதாயத்தின் அரசியல் விழிப்புணர்ச்சிக்கும் ஒற்றுமைக்கும் மூலவித்திட்ட பெருந்தலைவர் அமரர் வன்னியசிங்கம், மிகவும் அழுத்தந்திருத்தமாக அன்றே உணர்ந்து எச்சரித்திருக்கிறார்; அபிவிருத்தியென்ற போர்வையில் எம்பிரதேசத்தை சிங்களமயமாக்குவதே ஐக்கிய தேசியக் கட்சியின் திட்டம் என்பதை அவர் அம்பலப்படுத்தியிருக்கிறார் இதை நம்மவர் புரிந்து கொள்ளாது, 'அபிவிருத்தி பற்றிப் பேசுவது உள்ளபடியே வேதனைமிக்க செயலாகும்!

வியட்னாமியன் தனது நாட்டு விடுதலைக்குப் போராடிக்கொண்டிருந்த போது, அமெரிக்காவுடனோ, அல்லது வியட்னாமிலிருந்த அப்போதைய அமெரிக்காவின் கைப்பொம்மை அரசுடனோ வியட்னாமிய அபிவிருத்திபற்றி ஒத்துழைத்துக்கொண்டிருக்கவில்லை; விடுதலை ஒன்றுக்காகவே போராடினான்! இன்று பாலஸ்தீனத்தின் விடுதலைக்காகப் போராடும் பாலஸ்தீனிய விடுதலை வீரன், இஸ்ரேலிய அரசுக்கு பாலஸ்தீனப் பிரதேச அபிவிருத்திக்கு மட்டும் ஒத்துழைப்புத்தருவோம் என்று கூறிக்கொண்டிருக்கவில்லை. எல்லா முனைகளிலும் இஸ்ரேலை எதிர்த்துப் போராடுகிறான்!

ஒரு நாடு அடிமைப்பட்டுக் கிடக்கும் போது—அன்னியனால் சுரண்டப்படும்போது— அந்தநாட்டை விடுவிக்கும் விடுதலைப்போராட்டம்தான் முதலில் நடைபெற வேண்டும்; விடுதலை பெற்ற பின்னால்தான் நாட்டுஅபிவிருத்தி வேலைகளை நிம்மதியாகக் கவனித்துக்கொள்ள முடியும்! இதுவே விடுதலைப் போராட்டம் நடத்துகின்ற நாடுகள் பின்பற்றும் வழியாகும்.

நமது தமிழ்ஈழ நாட்டை நம்மிடம் ஒப்படைக்காது சட்டவிரோதமாக துப்பாக்கி முனையில் நம்மை ஆண்டு கொண்டிருக்கும் சிங்கள ஏகாதிபத்தியத்தை எந்தெந்த முனைகளில்—எந்தெந்த வழிகளில் — எப்படியெப்படியெல்லாம் எதிர்த்துப் போராட முடியுமோ—அந்தந்த முனைகளில்—அந்தந்த வழிகளில்—அப்படி அப்படி எதிர்த்துப்போராட வேண்டுமே தவிர, ஒத்துழைப்பு பல்லவி பாடவோ, நேசக்கரம் நீட்டவோ இது தருணம் அல்ல! முறையும் அல்ல!

சிங்கள அரசாங்கத்துடன் 'அபிவிருத்தி' யென்று கூறி ஒத்துழைக்க முயலுவோமானால் —நமது நாட்டை இழப்பதுமட்டுமல்ல — விடுதலைப் போராட்டமே பின்தள்ளப்பட்டுவிடும்; எதிர்ப்பு இயக்கம் பிசுபிசுத்து விடும். இறுதியில் இரண்டு தோணியில் கால்வைத்தவன் கதையே எமது இயக்கத்துக்கும் வந்துசேரும்!

எனவே ஒத்துழைப்பு என்ற பேச்சுக்கு இடமின்றி தமிழ்ஈழநாட்டை விடுவிக்கும் விடுதலைத்திருப்பணியை துரிதப்படுத்தி, ஒரு முழுமையான போராட்டத்துக்கு தமிழ் மக்களை தயார் செய்வதே கூட்டணியின் நிலைப்பாடாக இருக்க வேண்டும்! அரசியல் விடுதலை முதலில் அபிவிருத்தி அப்புறம். சிங்கள அரசுகூறும் அபிவிருத்தியென்பது நமது நிலத்தை அபகரிப்பதாகவேயிருக்கும் என்பதை நமது மக்கள் உணரவேண்டும் ;அவர்களுக்கு உணர்த்த வேண்டும்.

உன் அன்புத்தோழன்

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொன்னதும்— சொல்ல மறந்ததும்

சொன்னது:-

''அணிசேரா இயக்கத்தில் எமக்குப் பூரண நம்பிக்கை உண்டு''— ஜனாதிபதி ஜே. ஆர்.

சொல்ல மறந்தது:-

''ஆனால் நாம் அமெரிக்காவும் உலக வங்கியும் போடும் தாளத்துக்கே ஆடுவோம்!''

* * *

சொன்னது:-

''மக்கள் நலன்களைப் பாதிக்கும் சட்டங்களை நீக்கினோம்''— கல்கத்தாவில் ஜே. ஆர்.

சொல்ல மறந்தது:-

''ஆனால் தமிழ் மக்களை அடிமைகளாக்கும் சிங்களம் மட்டும் சட்டத்தையும், ஒற்றையாட்சி அரசியல் சட்டத்தையும் நீக்க மறுத்து விட்டோம்.

* * *

சொன்னது:-

எங்கும் எதையும்வாங்கும் நிலை உருவாக வேண்டும்! அரசாங்க பா. உக்களுக்கு பிரதமர் அறிவுரை.

சொல்ல மறந்தது:-

''அதாவது மக்களிடமிருந்து மிக விரைவில் உதையும் வாங்கத் தயாராக இருங்கள்!''

* * *

சொன்னது:-

''ரஷ்ய மக்களின் தேசபக்தியை நாம் மெச்சுகிறோம்.''— அமைச்சர் காமினிதிசாநாயகா.

சொல்ல மறந்தது:-

—''ஆனால் தமிழ் ஈழ மக்களின் தேசபக்தியை துப்பாக்கி முனையில் அடக்குவோம்!''

# தென்னக மாநிலங்களுடன் தமிழ்ஈழம் உறவுகொள்ளவேண்டும்!

## இன விடுதலைக்கு இது அவசியம்!

நாலந்து வாரங்களுக்கு முன் Illustrated Weekly of India வாரப்பத்திரிகை ஒன்றிலே வெளிவந்திருந்த ஒரு கட்டுரை என்னைக் கவர்ந்தது. இக்கட்டுரையை எழுதியிருந்தவர் ஒரு மலையாளி. இந்தியத் தலைநகரான டெல்லியில் வசிப்பவர்; மலையாளப் பத்திரிகையான 'மாத்ரு பூமி' யின் டெல்லி நிருபர் மலையாள மங்கை கமலாதாஸ் என்பவரின் அந்தரங்க வாழ்க்கை பற்றிய கதையைத் தேடிப்பிடித்து 'இன்டிபென்டன்ற்'பத்திரிகையில் வெளியிட்டு வரும் ரெஜிமைக்கேல் இந்த மாத்ரு பூமி நிருபர் எழுதிய கட்டுரையை வெளியிட்டிருப்பாரானல் எவ்வளவு நன்ருக இருந்திருக்கும்!

தென்னிந்தியத் தமிழர், கேரளர் ஆகியோர் அங்கு டெல்லியில் இரண்டாதரப் பிரசைகளாகக் கணிக்கப்பட்டு ஒதுக்கப்படுவதை வேதனையுடன் எழுதியுள்ளார் அந்தக் கேரளத்துக்காரர். தென்மானிலத்தவர் கூட எம்மைப்போல் விரக்தியடைந்து வேலைதேடி வெளிநாடுகளுக்குச் செல்கிருர்கள் என்பதை அறிய ஆச்சரியமாக இருக்கிறது. இந்தச் சங்கதி எமக்கு உற்சாக மூட்டுவதாக இருக்கிறது. தென்மாநிலத்தவரும் தம் குடுமியை இந்திக்காரரின் கையில் விட்டு வைத்திருக்கிருர்கள்.

தென்மாநிலத்தவர் தமது நிலையைப் புரிந்து கொண்டிருக்கிருர்களோ என்னவோ! புரிந்து கொண்டிருப்பார்களாயின் சிக்மளூர் இடைத்தேர்தலில் காங்கிரசும், ஜனதாவும் (வட இந்தியக் கட்சிகள்) தம் சொந்த மண்ணில் குட்டையைக் குழப்ப விட்டிருக்க மாட்டார்கள் என்னே வயிற்றெரிச்சல்...!

எமக்கு வேண்டியது தென் மாநிலத்தவரின் பூரண ஆதரவு, இந்தி வெறியர்களின் வேஷம் இம்மாநிலத்தவர்களால் கலைக்கப்பட வேண்டும். உலக அரங்கில் இந்த இந்தி — சிங்கள வெறியர்களின் உண்மைச் சொரூபம் தெரியப்படுத்தப்பட வேண்டும். இதன் பொருட்டு நாமும் தென் மாநிலத்தவராகிய அவர்களும் ஓரணியில் திரள வேண்டியது அவசியம். நாம் வேற்றுநாட்டு விஷயத்தில் தலையிடுவதாக இது வெளிப்பார்வைக்குத் தோற்றலாம். ஆனல், இது காலவரை இந்தி வெறியரின் செல்வாக்கிலுள்ள இந்திய அரசாங்கம் இலங்கைத் தமிழர்களின் விஷயத்தில் துடிப்புடன் செயலாற்றவில்லையென்பதை நாம் நெஞ்சில் பதித்து வைத்துக்கொள்ள வேண்டும். அதுமட்டுமல்ல, தமிழர்களுக்கு எதிராகவே அந்தரங்கத்தில்செயல்பட்டு வருகிறது. இது ஒரு பகிரங்க உண்மை! எனவே எமக்கு — தமிழர்களாகிய எமக்கு--ஓர் உரிமை உண்டு, அது, தென் மாநிலத்தவரை எம்பக்கம் திருப்ப வைக்கும் உரிமையே அது.

எமக்கு உலக நாடுகளின் உதவி இன்றியமையாதது போல் இந்தி வெறியரின் கைப்பிடிக்குள் இருக்கும் தென்மாநில மக்களின் பரிபூரண ஆதரவும் மிகமிக இன்றியமையாதது. சந்தர்ப்பம் நேரும்போது தமிழகம் மட்டும் எமக்கு ஆதரவாக நிற்பது மட்டும் போதாது. ஏனைய தென்மாநிலத்தவரும் அதே உணர்ச்சி, அதே பரபரப்புடன் குரல் எழுப்ப வேண்டும்.

இதற்குச் சில காரணங்களுண்டு. பௌத்தர்கள் அந்தக்காலத்தில் செய்து வந்த தில்லுமுல்லுகளால் இத் தென்மாநிலங்களிலிருந்து விரட்டப்பட்டது பௌத்தம். தென் மாநிலத்தவர்களுக்கும் எமக்கும் இந்து மதம் பிணைப்பு ஏற்படுத்துகிறது. பழக்க வழக்கங்கள், கலாச்சாரம் ஆகியன எம்மிருவருக்கும் பொது. மொழிகூட எம் ஒற்றுமைக்குக் குறுக்கே வர முடியாது. இங்கே நாம் ஒன்றைக் கவனிக்க வேண்டும். பங்களாதேஷ்—மே. பகிஸ்தான் மோதல் எம்மைத் தளர்வடையச் செய்ய வேண்டுவதில்லை. எப்படி இந்துக்களாகிய வட இந்தியர் மீது தென்னிந்தியர் அதிருப்தி யடைகிருர்களோ அப்படி முஸ்லீம்களாகிய வங்காளிகள் பாகிஸ்தானியர் மீது அதிருப்தி கொள்கிருர்கள். இங்கே மதம் ஒற்றுமையை உண்டாக்கவில்லை என்பது கவனிக்கத் தக்கது.

ஆனல் இத்தனைக்கும் தமிழகம் தவிர்ந்த ஏனையதென் மாநிலங்களோடு எம் பிணைப்பு இறுகுவதற்கு இந்து மதம் நிச்சயம் உதவமுடியும். இந்தப் இணைப்பு பௌத்தமதப் போர்வையில் நடக்கும் ஆக்கிரமிப்பைத்தடுக்க உதவமுடியும். நாம் குறிப்பிட்ட கேரள, தெலுங்கரோடு வைத்துக் கொள்ளவேண்டிய உறவு மத அடிப்படையிலேதான்.

தென் மாநிலங்களில் எமது பிரச்சாரம் எப்படிப் பட்டதாக இருக்கவேண்டும்?

தமிழ்நாட்டுத் தமிழர் குறிப்பிட்ட தென் மாநிலங்களில் எமக்காகப் பிரசாரத்தை மேற்கொள்ள வேண்டும். பிரசாரத்துக்குரிய சாதனங்கள்பல. இருப்பினும் நாம் டேப் 'TAPE' பதிவின்மூலம்எமது பிரசாரத்தைச்செய்யலாம். இங்குள்ள எமது நிலையைத் தெளிவாக டேப்பில் பிரசங்கமாகப் பதிவுசெய்து எமது ஆதரவாளர்களுக்கு தமிழகத்துக்கு அனுப்ப வேண்டும் இப்பிரசங்கங்கள் தேவைக்கேற்ப வேறு பல டேப்புகளில் பதிவு செய்து ஏனைய இந்திய மாநிலங்களில் உள்ள எமது ஆதரவாளர்களுக்குஅனுப்பி வைக்கவேண்டும். எமது ஆதரவாளர் சிறு சிறு குழுக்களிடையே, படித்தவர் உட்பட, இப்பிரசங்கங்களை ஒலிபரப்பவேண்டும். இது விரிவாக ஆராயப்படவேண்டியது.

எமது நிலையை நாம்தென்னிந்தியர்களுக்குத் தெளிவு

—8-ம் பக்கம் பார்க்க

## அலிப்பூர் சதிவழக்கும் அரவிந்த —

—2-ம் பக்க தொடர்

பளித்து நீதிபதிகள் அவரை விடுதலை செய்தனர். வரீந்திரருக்கும், உல்லாசுக்கும் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டது. 10 பேர்களுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. பின்னர் சிறைக் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு அளிக்கப்பட்டபோது வரீந்திரரும் ஏனையோரும் விடுதலை செய்யப்பட்டனர். வரீந்திரர் 1959ல் காலமானர்.

### சிறைவாழ்வு

சதிவழக்கு விசாரணையின் போது அரவிந்தர் 1908 மே 5 முதல், 1909 மே 6 வரை சரியாக ஓராண்டு காலம் அலிப்பூர் சிறையில் வைக்கப்பட்டிருந்தார். அரசியல் கைதிகளுக்கு சலுகை ஏதும் இல்லாத காலம் அது. விசாரணைக் கைதியாகஅவர் இருந்தும், தண்டிக்கப்பட்ட கைதிபோலவே நடத்தப்பட்டார். 9 அடி நீளம், 5 அடி அகலமுள்ள ஜன்னல் இல்லாத அறையில், அவர் தனித்து வைக்கப்பட்டிருந்தார். உண்பது, கழிவது, சிறுநீர்பெய்வது யாவும் [illegible]

ரணையிலிடுபட்டு, ஆத்மீக ஞானியாக மாறினர்.

அரவிந்தர் சிறையிலிருந்து வெளியேவந்தபோது பால கங்காதரதிலகர், பர்மாவின் மாண்டலேயில் நீண்டகாலச் சிறையில் வைக்கப்பட்டிருந்தார். தேசியக் கட்சி குன்றிப்போயிருந்தது. 'வந்தேமாதரம்' நின்று போய்விட்டது. புரட்சிக் கனலாக விளங்கிய அரவிந்தரின் வாழ்க்கை 'அதன் பின் ஞானமார்க்கத்தில் ஈடுபட்டது.

யூன் 31-'கர்மயோகி' இதழில், ''என் நாட்டவர்க்குத் திறந்த மடல்'' எனும் தலைப்பில் ஒரு செய்தியை விடுத்தார் அரவிந்தர். அதில் அவர் கூறியிருந்தது இதுதான்—

''தலைவர்கள் வருவார்கள்— போவார்கள். அவர்களைப் பற்றித் தேசியவாதிகள் கவலைப்படலாகாது. எல்லா அரசியல் பேரியக்கங்களும் இறைவனுல் அனுப்பப்படும் தலைவனுக்காக காத்திருக்கும்; அத்தலைவன் வந்ததும், முன்னேறிப்பணியாற்றி இலட்சிய சித்திபெறும்; எனவே வரப்போகும் தலைவருக்காகக் காத்திருங்கள்!''

## வெளிநாடுகளில்-

—7-ம் பக்கத் தொடர்

ஆதரவு ஏராளமாக பெருகி வருவதை காணக்கூடியதாக இருக்கின்றது. வெளிநாட்டில் இருப்பவர்கள் இங்குள்ளவர்களிலும் பார்க்க கூடிய முறையில் செயல்பட துடிக்கின்ருர்கள்.

human wave theory என்ற ஒரு கொள்கை உண்டு.

கோஸ்ரிக்காவிலிருந்து வந்து நெப்போலியன் பிரான்சிய மக்களை காப்பாற்றியதுபோல் ஈழத்திலும், மலாயாவில் பிறந்து இங்கு வந்த செல்வா, ஜி.ஜி திருச்செல்வம் போன்றவர்களே தமிழினத்தின் தலைவர்களாக கருதப்பட்டார்கள். தமிழ் மக்கள் தமது விடுதலை போராட்டத்துக்கு எதைப் பயன்படுத்தப் போகின்ருர்கள் என்பது இன்னும் சிறிது பொறுத்து பார்க்க வேண்டிய தொன்ருகும்.

இறுதியாக நான் கூறுவது —தமிழ்ஈழம்என்பதுதட்டிக்கழிக்கக்கூடியதல்ல. இதற்கு நமது தலைவர்கள் ஒரு முடிவுக்கு வரவேண்டும். அல்லாவிடில் சிறிது காலத்தின் பின்னர் நிச்சயமாக இப்பிரச்சினை உலகப் பிரச்சினையாக மாறும். இவ்விடைக்காலத்தில் தமிழ மக்கள் எத்தனையோ இன்னல்களை அனுபவிப்பார்கள். ஆனல் இறுதியில் தமது இலட்சியத்தை அடைந்தே தீருவார்கள்.


# சுடர்

( இம்மாத இதழில் )

- ★ 'வீரனை மெச்சிய வீரன்' — க. வேலாயுதம் (இதயத்தை தொடும் உண்மைச் சம்பவம்)
- ★ 'தனிப்பாடல் விருந்து' — க. கலாமோகன். (இலக்கியச் சுவை ததும்பும் கட்டுரை)
- ★ 'உள்ளத்தால் கெடாதவள் உமா'— செ. குணரத்தினம் (நெஞ்சை உருக்கும் சிறுகதை)
- ★ இரசிகமணியின் ஆபூர்வ நினைவுகள் — பொ. சண்முகநாதன் (பல அரிய தகவல்களடங்கிய கட்டுரை)
- ★ கருங்காலிகள் — காவலூர் எஸ். ஜெகநாதன் (சமூக அடிமைத்தனத்தை சாடும் சிறுகதை)

மற்றும் பல சிறுகதைகள், கவிதைகள், விகடத் துணுக்குகள், அரசியல் துணுக்குகள், விநோதச் செய்திகளுடனும், மங்கையர் மன்றம்''சுடர் வட்டம்' ஆகிய புது அம்சங்களுடன் வெளிவந்து விட்டது.

**தமிழர் வீடுகளிலெல்லாம் ஒளிவிடவேண்டிய சஞ்சிகை**

**சுடர்**

விற்பனையாளர்கள் தொடர்புகொள்ளவேண்டிய முகவரி

நிர்வாகி,
'சுடர்'
194 ஏ: பண்டாரநாயக்க வீதி'
கொழும்பு - 12.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடுகளில் தமிழ்ஈழ விடுதலைக்கு பெரும் ஆதரவு திரண்டுவருகிறது!

## போராட்ட வழி ஆயுதமா? அஹிம்சையா? என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்!

### கண்டியில் ஜெயரத்தினம் வில்சன் பேருரை!

கலாநிதி ஜெயரெத்தினம் வில்சன் அவர்கள் ஞானப்பிரகாசர் தமிழ் கழகத்தினுடைய அழைப்பை ஏற்று 25-10-1978 புதன்கிழமை மாலை 5-15 மணியளவில் சக்கற் கலை அரங்கில் ''தமிழர் தேசியவாதம் சிறீலங்காவின் புதிய அரசியலமைப்பும்'' என்ற தலைப்பில் ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம் வருமாறு:-

அரசியல்வாதி என்ற ரீதியிலோ அல்லது பிரசாரத்தை மேற்கொண்டோ நான் இங்கு வரவில்லை. எனது கடந்தகால வாழ்க்கையில் 20 வருடங்களுக்கு மேலாக இலங்கை பேராதனை வளாகத்தில் அரசியல் துறையில் பேராசிரியராகவும், அதன் பின்னர் ஆறு வருடங்களாக கனடா புறுன்ஸ்விக் சர்வகலாசாலையில் பேராசிரியராக பணிபுரியும் இவ்வேளையிலும், ஈழநாட்டில் நடைபெறும் அரசியல் மாற்றங்களையும் அதன் தாக்கங்களையும் மிகவும் கவனமாக அவதானித்து வருகின்றேன். நான் ஒரு அரசியல் துறையின் மாணவன் என்ற ரீதியிலும் ஆசிரியர் என்ன முறையிலும் எனது ஆய்வுகளை மேற்கோள்களாக வைத்து, கடந்தகால ஈழநாட்டு அரசியல் சரித்திரத்தை ஆதாரமாகவும் வைத்து எனது உரையை ஆற்ற விரும்புகின்றேன்.

1974ம் ஆண்டில் வெளியிடப்பட்ட எனது புத்தகத்தில் (POLITICS IN SRI LANKA) தமிழரும் தேசிய இனமும் என்ற தலைப்பில் ஈழத்தில் தமிழ்மக்கள் எதிர்நோக்கும்பிரச்சினை பற்றிமிகவு தெளிவாக குறிப்பிட்டிருந்தேன். உலகின் எந்தப் பகுதியிலும் ஒரு சிறுபான்மை இனமானது தனது சுயமரியாதையோடு வாழ விரும்புமாயின், அது எவ்வித பாதிப்புக்கும் உள்ளாகாதவாறு வாழவிரும்புகின்றது. குவிபெக் போன்றவை இதற்கு சிறந்த உதாரணங்களாகும்.

இலங்கையில் ஐக்கிய தேசியகட்சி பழமைவாய்ந்த கட்சியாகும். சிங்கள மக்களின் உரிமைகளை முழுமையாக பாதுகாப்போம் என்று கூறி இக்கட்சியில் இருந்து தோன்றியதே சிறீலங்கா சுதந்திரக்கட்சியாகும். திரும்பவும் இதே கட்சியின் பிரஜா உரிமை மசோதாவுக்கு எதிராக எழுந்ததுவே தமிழ் மக்களின் தமிழ் அரசு கட்சியாகும். பிரிந்தும் எதிர்த்தும் தோன்றிய கட்சிகளின் வரலாறுகளை நோக்குமிடத்தில் இங்கு வாழும் இரு இனங்களும் இனி ஒன்றுபட்டு ஒற்றுமையாக வாழ்வார்கள் என்பது என்னால் ஏற்றுக்கொள்ளமுடியாததொன்று. தமிழ்மக்கள் மத்தியில் சகல வழிகளிலும் தாம் பாதுகாப்பற்ற முறையில் வாழ்ந்துகொண்டு வருகின்றோம் என்றஉணர்வு வளர்ந்து கொண்டு வருகின்றது. அது உண்மையாகும்.

சிங்கள மக்களோ தங்களை 72ம் ஆண்டு, '78ம் ஆண்டு அரசியலமைப்பினால் பாதுகாத்து ஒரு ஆளுகின்ற இனமாக, தம்மை மாற்றிக் கொண்டார்கள். இதனால் சிறுபான்மையினரான தமிழ் மக்கள் ஆளப்படுகின்ற இனமாக விரக்திநிலைக்கு தள்ளப் பட்டுள்ளனர்.

1958, 1977ம் ஆண்டில் நடைபெற்ற இனக்கலவரங்கள் தமிழ் மக்கள் மத்தியில் இறுதியான ஒரு முடிவை எடுத்து விட வழிகோலி விட்டது.

இன்றைய நிலையில் அவர்கள் தமது சுயநிர்ணயத்தை நிலைநாட்ட தங்களது வாழ்வு முறையைதொடர்ந்து காப்பாற்ற வேண்டும். பாரம்பரிய பிரதேசங்களான வடக்கு, கிழக்கு பிரதேசங்களை மக்கள் விரும்பி வாழக்கூடிய சிறந்த பிரதேசங்களாக மாற்றியமைக்க வேண்டும். தங்கள் நாட்டை முன்னேற்ற எதை செய்ய விரும்புகின்றார்களோ, அதை செய்யக் கூடிய நிலையில் இருக்க வேண்டும்.

தமிழர்களிடையே தேசிய உணர்வானது இன்று நேற்று ஏற்பட்டதொன்றல்ல. 1911ம் ஆண்டு இ-டி. டென்கம் எழுதிய ஒரு புத்தகத்தில். யாழ்ப்பாண மக்கள் உலகில் எந்தப்பகுதியில் சென்று குடியேறினாலும் அவர்கள் அங்கேயே தங்கிவிட விரும்புவதில்லை. இறப்பதற்கு முன்னர் தமது 'மெக்கா' வான யாழ்ப்பாணத்துக்கு திரும்பி விடவே விரும்புகின்றார்கள்.

"While Jaffanese may immigrate to any part of the world they do not desire to settle down there. No one object of their desire is 'the Mecca' that is Jaffna to which they all hope to come back before they die''

அவர்கள் தேசிய உணர்வு வளர்ந்து இன்று அவர்கள் பிரிந்து வாழ்வதையே விரும்புகின்றார்கள். 1978ம் ஆண்டின் அரசியல்அமைப்பு ஆங்கிலத்திற்கு உரிய இடம் அளித்தும், தமிழ்மொழியை இரண்டாவது தேசியமொழியாக அங்கீகரித்து இருந்த போதிலும் தமிழ் மக்கள் தங்கள் இலட்சியத்தை மாற்றியமைப்பார்கள் என எதிர்பார்க்க முடியாது. கடந்த காலங்களில் பல வழிகளில் அவர்கள்ஏமாற்றப்பட்டார்கள் என்பதை உணர்ந்து விட்டார்கள்.

இன்று யாவராலும்பேசப்படும் மாவட்டமந்திரிகள் பற்றிய வெள்ளையறிக்கையை ஆராயுமிடத்தில், அது 10 அல்லது 15 வருடங்களுக்கு முன்னர் டட்லி—செல்வா, பண்டா—செல்வா ஒப்பந்தங்களின் பிரதிபலிப்பேயாகும். இதை தமிழ் மக்கள் அன்று கேட்டார்கள். இன்று காலம் சென்று விட்டது. இன்று சிங்கள மக்களை ஒரு பெரும்பான்மையினம் என்று தமிழ் மக்கள் கருதவில்லை. மாறாக அவர்களை ஒரு ஆளுகின்ற இனமாகவும் தம்மை ஆளப்படுகின்ற இனமாகவும் எண்ணுகின்றார்கள். இவையனைத்தையும் கருத்தில் கொண்டு பிரிந்து வாழ்வதே சிறந்ததென முடிவுக்கு வந்து விட்டனர்.

அவர்கள் எவ்வாறு தமது இலட்சியத்தை அடைய முயலுகின்றார்கள் என சிங்கள மக்களான நீங்களும் அறிய விரும்புவீர்கள். இந்தியாவின் விடுதலைப் போராட்டத்திற்கு அகிம்சை, ஒத்துழையாமை போன்றவை உதவியதுபோல் தமிழ்ஈழ விடுதலைக்கும் அவை பயன்படும் என முதியோர் கருதுகின்றார்கள். துடிப்புமிக்க இளைஞர்கள் ஆயுதம் தாங்கியாவது போராடுவேம் என்கின்றனர். மத்திய கிழக்கு, கனடா, அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளிலெல்லாம்ஈழவிடுதலைக்கான

—6-ம் பக்கம் பார்க்க

# சர்வதேச அரங்கில் சிறீலங்காவின் இனவாத சுயரூபம் அம்பலமாகும்!

### மனித உரிமை நாளைப் பயன்படுத்த வெளிநாட்டு இயக்கங்கள் திட்டம்!

1979ம் ஆண்டை 'இனக்கொலைக்கு' எதிராகப் போராடும் ஆண்டாக தமிழ் ஈழ விடுதலை இயக்கங்கள் பிரகடனப்படுத்தவிருக்கின்ற காரணத்தினால் தமிழ் ஈழத்தில் தமிழர் தம்மரபு வழித் தாயகத்தில்—தமிழர் தம் மரபு வழித் தாயகத்தில் இனவாத சிங்கள ஸ்ரீலங்கா அரசு மேற்கொள்ளப்போவதாக அறிவித்துள்ள சிங்களக் குடியேற்றங்களுக்கும், தாய் மொழியேமாணவர்போதனு மொழியாக அமைவதற்குப் பதிலாக பெற்றோர் விரும்பிய தேசிய மொழியில் மாணவர்களுக்குப் போதனை என புதிய அரசமைப்புத் திட்டம் விதிக்கும்—சிறுவர் சம்பந்தப்பட்ட மனித உரிமை மீறுதலுக்கும் உலகின் கவனத்தை ஈர்ப்பதன் மூலம் உலக சமுதாயத்தின் மனச்சாட்சியை உறுத்தும் நடவடிக்கைகளை எதிர்வரும் மனித உரிமைகள் தினமான டிசம்பர் 10ம் நாள் முதல் ஓராண்டு காலத்துக்கு பல்வேறு சாத்வீக இயக்கங்களைத் திட்டமிட்டு உலகின் பல்வேறு நாடுகளின் தலைநகரங்களில் நடத்த கடல் கடந்த நாடுகளில் இயங்கிவரும் தமிழ் ஈழ விடுதலை இயக்கங்கள்உத்தேசித்திருப்பதாக அறியப்படுகிறது.

சிங்கள பௌத்த அரசின் கெடுபிடிகள் யாவற்றுக்கும் சிகரமாகத் திகழ்வது, தமிழர்களைத் தெற்கேயும், சிங்களவர்களை வடக்கேயும் புலம் பெயர வைப்பது தான். இத்தகைய புலப்பெயர்வு காலனி ஆட்சிக் காலத்தில் தமிழ் நாட்டில் பதினெட்டாம் நூற்றாண்டில் நிகழ்ந்ததும் அதன் பெறுபேறாக பீஜீ, மொறிசியஸ், றினிடாட், மாட்னிக் மற்றும் கரிபியன் தீவுகளில் குடியேற்றப்பட்ட தமிழ்க் குலம் இனமழிந்து போனதும் வரலாறு கற்பிக்கும் பாடமாகும். இந்தப் பழைய பாடத்தில் இருந்து தமிழ் ஈழம் காணப் புறப்பட்டிருக்கும் புதிய தமிழர் பரம்பரைக்கு தார்மீகச் சாமியார் புதியபாடம் புகட்டப்போவதாகப் பயமுறுத்தல் விடுத்துள்ளார். மாவட்ட அமைச்சர் நியமனங்களைத் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ஏற்காதுபோயின் அதனை நடைமுறைப்படுத்தப்போவதாக அறிவித்ததுடன் நில்லாது சம்பந்தப்பட்ட சிங்களக் குடியேற்றங்களுக்குப் பாதுகாப்பு நல்குவதற்காகதமிழ் ஈழத்தில் பரவலாக இராணுவ கடற்படை, விமானப் படை முகாம்களை அமைக்கும் வேலையிலும் துரிதம் காட்டப்படுகிறது.

ஆகவேதான் அவர் ''காயமற்ற கறியும் [illegible] சாம்பார் நிலைக்கு எனது தமிழ் இனம் தள்ளப்படுவதுதான் தேசியம் எனில் அத் தேசியத்தை யான் வேண்டேன்'' என்றுகூறி தம்மால் தாபிக்கப்பட்ட தேசிய காங்கிரசில் இருந்து வெளியேறினர். தமிழ்த் தேசியத்தின் முன்னோடியான சேர். பொன், அருணாசலம். அன்னரால் தூக்கிவீசப்பட்ட தனித்துவம் மறுக்கும் தேசியத்தை, மரபுவழித் தாயகத்திலேயே தமிழர்களைச் சிறுமைப்படுத்தி சிறுபான்மையாகும் தேசியத்தை மீண்டும் நடைமுறைப்படுத்த முன்னிற்கிறார் தார்மீகச் சாமியார்.

தமிழ் ஈழம் இனக்கொலைக்கு ஆளாகும் இக்கட்டு நெருங்கிவரும் வேளையில் வெளிநாடுகளில் உள்ள தாம் செய்யக்கூடியது சாத்வீக நெறியில் உலகின் மனச்சாட்சியை உறுத்தும் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துவதே முதல்பணியாக அமைய முடியுமென்று உலக நாடுகளிலுள்ள தமிழீழ விடுதலை இயக்கங்கள் கருதுகின்றன. புறாடென்சல் உலகக் கிண்ணப் போட்டியின் போது லண்டன் கிறிக்கெட் மைதானங்களில் தாம் நடத்திய ஆர்ப்பாட்டமும், ஐ. நா. பொதுச்சபையின் சபா மண்டபத்தில் தனி மனிதராக [illegible] வைகுந்தவாசன் நிகழ்த்திய சாதனையும் அவ்வழியில் செயல்பட அவர்களுக்கு உற்சாகம் அளிப்பதாக அமைகிறது.

ஜே. ஆர். மேற்கொள்ளப்போவதாக அறிவித்துள்ள குடியேற்றங்கள் இனக்கொலை நடவடிக்கை என்பதை ஐ. நா. சபையும் 'ஒரு சாதியத்தினரைச் சிறுபான்மையினராக்கும் முறையில் பிறிதொரு சாதியத்தினரைப் பெருந்தொகையில் அவர்கள் மத்தியில் வலிந்து குடியேற்றுவதைக் கண்டித்திருப்பதன் மூலம்' ஒப்புக்கொண்டுள்ளது. கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் யூதக் குடியேற்றங்களை அமெரிக்க ஜனதிபதி ஜிம்மிகாட்டர் மட்டுமல்ல அனைத்துலகுமே கண்டிக்கிறது. தமிழ் ஈழத்தில் மேற்கொள்ளப்பட அறிவிக்கப்பட்டுள்ள சிங்களக் குடியேற்றங்களை உலகநாடுகள் கண்டிக்கும் நாள் விரைந்திட வெளிநாடுகளிலுள்ள தமிழ் ஈழ விடுதலை இயக்கங்களின் பணி உதவட்டும்,

—திரவியம்.

## பிரிட்டனின் பெருந்தன்மை!

பிரிட்டனில் நிலவும் இனவாதத்தை ஒழித்துக்கட்டும் நடவடிக்கையில்டுபடுவோருக்கு பிரிட்டிஷ் அரசாங்கமே நிதி உதவியளிக்க முன்வந்துள்ளது. இனவாதத்துக்கு எதிரான கண்டனக் கூட்டங்கள், துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள், ஆகிய நடவடிக்கைகளுக்காக 10,000 பவுன் நிதி உதவியளிக்க பிரிட்டிஷ் அரசு முடிவு செய்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்னக....

—6-ம் பக்கத் தொடர்

படுத்திவரும்போது அவர்கள் தம் நிலையையும் தெரிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது. தம் அடிமைத்தனத்தைத் தென்னிந்தியர் உணரத்தலைப்படும்போது தான் ஏனைய நாடுகளில், குறிப்பாக இலங்கையில் நாம் படும் துயரை, தாம் படும் துயராக எண்ணி வேதனையடைவர்.

தமிழர், கன்னடர், தெலுங்கர், கேரளர், வங்காளியர் ஆகியோர் விழிப்படையும் நாளே விமோசனமடையும் நாள். இந்த விழிப்புத்தான் இது கால வரை மக்களின் நல்வாழ்வில் எள்ளளவும் அக்கறை காட்டாது உலகின் கண்ணில் மண்ணைத் தூவி, தம் பட்டமடித்து வரும் இந்திய இலங்கை அரசுகளின் கொட்டம் அடங்க உதவ முடியும்.

—குருவி—

## தமிழ் மாண....

—3-ம் பக்கத் தொடர்

டுப்படுத்தலாமா என்று ஆலோசிக்கப்படுகிறது.

இன அடிப்படையில்தான் பல்கலைக்கழகத்துக்கு மாணவர்களின் எண்ணிக்கையை அனுமதிப்பது என்றால், இன அடிப்படையில் நாட்டை பிரித்துத்தரவும் அரசாங்கம் முன்வரவேண்டும்.

இன அடிப்படையில், தமிழ் ஈழமும் சிறீலங்காவும் பிரிந்து விட்டால், சிங்களவர்கள் தமது பல்கலைக் கழகங்களில் எந்த ஒரு தமிழனுக்கும் இடம் தரவேண்டியதில்லை. சிங்களவர்களுக்கு மட்டுமே இடம்தர முடியும். தமிழர்கள் மீது வீண்பழிசுமத்தவும் வேண்டியதில்லை!

ஆகவே—இரு இனங்களும் இவ்வாறு சந்தேகக்கண்களுடன் வழுவழுத்த உறவு கொண்டிருப்பதைவிட, தனித்தனியே பிரிந்து, ஒற்றுமையாக வாழ்வதே உகந்தது. இதையே நாம் என்றைக்கும் கூறுகிறோம்,

தமிழ் ஈழத்தை தனியே பிரிந்து போக விடுங்கள்—தமிழர்கள் தங்கள் பிரச்சினைகளை தாமாகவே தீர்த்துக் கொள்வார்கள். தமிழர்களையும் சேர்த்துவைத்துக் கொண்டு அவர்களது நெஞ்சில் வேலைச் செலுத்தாதிர்கள்!

— சங்கிலியன்

## சந்திரகாசன்

—1-ம் பக்கம் பார்க்க

மாநாட்டில், உலகடங்கிலுமுள்ள தேசிய இனங்களின் பிரச்சினைகள் பற்றி விவாதிக்கப் படவுள்ளது. இம் மாநாட்டில் ஈழத் தமிழர் பிரச்சினைபற்றி திரு. சந்திரகாசன் உரையாற்றுகிறார்.

அவுஸ்ரேலியா, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்யும் திரு. சந்திரகாசன் டிசெம்பர் 17ம் திகதி நாடு திரும்புவார்.

## அரசாங்க நிலங்..

—1-ம் பக்க தொடர்

விளங்கும் நிலத்திலிருந்து வெளியேற்ற தார்மீக அரசு சட்ட நடவடிக்கைகளிறங்கியுள்ளது. வவுனியா, திருகோணமலை போன்ற பகுதிகளில் காணியற்ற தமிழ் அகதிகள் இவ்வாறாக குடியேறியுள்ளனர். இவர்களை துரத்தும்படி சிங்கள அரசு உத்தரவிட்டுள்ளது.

இதே போல சிங்களக் கள்ளக் குடியேற்றக்காரர்களும் துரத்தப்படுவார்களா அல்லது அவர்களுக்கு மட்டும் அவர்கள்குடியிருக்கும் காணிகள் சட்ட ரீதியாக்கப்பட்டு சொந்தமாக்கப்படுமா என்பதை அவதானிகள் கூர்ந்து கவனித்து வருகின்றனர்.





சிக்கன சலவைக்கு மில்க்வைற் பார்சோப் வாங்கி உபயோகியுங்கள். பெரிய பார்சோப்பாகவும், சிறிய பார்சோப்பாகவும் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றது. 10 மேலுறைகளை அனுப்பி அழகிய பொலித்தீன் பையைப் பரிசாகப் பெறுங்கள்.

**மில்க்வைற் யாழ்ப்பாணம்**

**கெப்பிட்டல்**

சசிகுமார், நிர்மலா, ஏ. வி. எம். ராஜன், மனோகரம்மா நடித்த—

**அவள்**

(ஈஸ்மன் கலர்)

**கிங்ஸ்லி** (கொழும்பு) 4-வது வாரம்

சிவாஜி கணேசன் ஜெயலலிதா சந்திரபாபு நடித்த-

**நீதி**

[ புதிய பிரதி ஈஸ்மன் கலர் ]

**லிடோ** (யாழ்நகர்) 3-வது வாரம்

**எங்கள் தங்க ராஜா**

— ஈஸ்மன் கலர் —

20-ம் திகதி முதல்

வல்லவன் ஒருவன்

**விஜயா** (மட்டுநகர்)

**தீர்க்க சுமங்கலி**

**கெயிட்டி** 2-வது வாரம் [கொட்டாஞ்சேனை]

பிருதிவி ராஜ்கபூர் திலிப்குமார், மதுபாலா, அஜீப்த்

- நடித்த -

**அக்பர்**

[ நடனங்கள் ரெக்னிக் கலர் ]

**செல்லமகால்** 3-வது வாரம்

எம். என்: சிவராம், எஸ். என். தனரட்ணம் விஸ்வநாதராஜா, சந்திரகலா, அஜேஜா, மாஸ்டர் ஹைஜி, செல்வம் பொஸ்கோ நடித்த -

**அநுராகம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் மகாத்மா காந்தி வீதி 15ம் இலக்கத்திலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் 1978 ம் ஆண்டு நவம்பர் மாதம் 19ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.